www.padippakam.com


# புதிய ஜனநாயகம்


பிப்ரவரி 2007

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

ரூ. 5.00




முல்லைப் பெரியாறு: தீர்வு என்ன?



அமெரிக்காவின் திமிரும் இரட்டை வேடமும்



சிங்கூர் - நந்திகிராமம்



தாய்மையை விலைபேசும் உலகமயம்!

# சி.பி.எம்: துரோகிகளா? எதிரிகளா?

படிப்பகம்

www.padippakam.com

## உலக வங்கி உத்தரவு:

# தனியார்மயமாகும் ஆரம்ப சுகாதார மையங்கள்

பொதுமக்களுக்கு வழங்கும் அனைத்து சேவைகளுக்கும் அரசாங்கம் உரிய கட்டணம் வசூலிக்க வேண்டும் என்பது, இந்தியா போன்ற ஏழை நாடுகளின் மீது உலக வங்கி திணிக்கும் நிபந்தனைகளுள் ஒன்று. இக்கட்டளைக்குக் கீழ்படிந்துதான், குடிநீர், மின்சாரம், போக்குவரத்து என அரசால் வழங்கப்பட்டுவரும் அனைத்து விதமான சேவைகளின் கட்டணங்களும் மெல்ல மெல்ல இலாபம் ஈட்டுவதை நோக்கி உயர்த்தப்பட்டு வருகின்றன; அரசாங்க மருத்துவமனைகளில் நுழைவுக் கட்டணம் வசூலிப்பது; கட்டணம் கட்டும் சிகிச்சை பிரிவை (pay ward) உருவாக்குவது என மருத்துவ சேவையிலும் கூட வணிகமயத்தைப் புகுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதனின் தொடர்ச்சியாக, அரசு நடத்தி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அனைத்திலும் வணிகமயம்/தனியார் மயத்தைப் புகுத்தும் ஒரு திட்டத்தை தி.மு.க. அரசு அறிவித்திருக்கிறது.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் கிராமப்புற ஏழைகள்; சமூக அடுக்கில் விளிம்பு நிலையில் வாழும் மக்கள் ஆகியோருக்கு எதிர்வரும் 2012-ஆம் ஆண்டுக்குள் தரமான மருத்துவ வசதியைச் செய்து தரப்போவதாகக் கூறிக் கொண்டு, ''தேசிய கிராமப்புற நல வாழ்வு பணித் திட்டம்'' என்றவொரு திட்டத்தை, 2005-ஆம் ஆண்டு மைய அரசு அறிவித்தது. கேட்பதற்கு சர்க்கரையாக இனிக்கும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, அரசு மருத்துவமனைகளின் எண்ணிக்கை கூட்டப்படும்; அங்கு வழங்கப்படும் மருத்துவ சேவை தரமானதாக மாற்றப்படும் என்றெல்லாம் நீங்கள் கற்பனை செய்து கொண்டால், அதில் வெந்நீரை ஊற்றுகிறது மைய அரசு. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நிதி ஒதுக்குவது; அவற்றை நிர்வகிப்பது ஆகிய பொறுப்புகளில் இருந்து அரசு விலகி விட வேண்டும் என்பது தான் இத்திட்டத்தின் முக்கிய நோக்கம்.

இத்திட்டத்தைத் தமிழகத்தில் செயல்படுத்துவதற்காக, ''ஆரம்ப சுகாதார நிலையங்களை நிர்வகிக்கும் பொறுப்பைப் பதிவு பெற்ற கூட்டுறவு சொசைட்டிகளிடம் ஒப்படைப்பதற்கு'' உத்தரவிட்டுள்ள தமிழக அரசு, அச்சங்கங்களுக்கு, ''நோயாளிகள் நலச் சங்கங்கள்'' என வசீகரமான பெயரைச் சூட்டியிருக்கிறது.

தண்ணீரைத் தனியார்மயமாக்கும்/வணிகமயமாக்கும் திட்டத்தை நிறைவேற்ற, ''தண்ணீர் பயன்படுத்துவோர் சங்கங்கள்'' உருவாக்கப்பட்டதை நினைத்துப் பார்த்தால், ''நோயாளிகள் நலச் சங்கங்கள்'' உருவாக்கப்படுவதன் பின்னுள்ள அபாயத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆரம்ப சுகாதார நிலையங்களை நிர்வகிக்க உருவாக்கப்படும் கூட்டுறவு சொசைட்டிகளில், அரசு மருத்துவர்கள், சுகாதாரத்துறை அதிகாரிகள், கிராமப் பஞ்சாயத்து உறுப்பினர்கள் மட்டுமின்றி, தனிநபர்களும், தனியார் நிறுவனங்களும் உறப்பினர்களாகப் பங்கு பெற முடியும்.

''ஒரு தனியார் நிறுவனம், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு லட்ச ரூபாயை நன்கொடையாகக் கொடுத்தால்; அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள ஒரு வார்டை தத்து எடுத்துக் கொண்டால் அல்லது ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பராமரிக்கும் செலவுகளை ஏற்றுக் கொண்டால், அத்தனியார் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர், நிர்வாக உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவார். 25,000 ரூபாய்க்கு மேல் நன்கொடையாகத் தரும் எந்தவொரு நபரும் இந்த சொசைட்டியின் இணை உறுப்பினராக (Associate Member)ச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்'' என உறுப்பினர் பதவிக்கான ஏலத்தொகை சட்டப்பூர்வமாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

''ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படும் பகுதியின் நிலைமைக்கு ஏற்ப, அங்கு சிகிச்சை பெறுவதற்கு வரும் நோயாளிகளிடம் கட்டணம் (user fee) வசூலிக்கவும்; ஆரம்ப சுகாதார வளாகத்திற்குள்ளேயே, எம்.ஆர்.ஐ. மற்றும் சி.டி. ஸ்கேன், சோனோகிராபி போன்ற மருத்துவப் பரிசோதனைக் கருவிகளை தனியார் நிறுவனங்கள் நிறுவிக் கொள்ள அனுமதிக்கவும், அம்மருத்துவப் பரிசோதனைக்குரிய கட்டணங்களை நிர்ணயிக்கவும்; ஒப்பந்த அடிப்படையில் மருத்துவர்களை நியமிக்கவும்; இரத்தப் பரிசோதனை, ஆம்புலன்ஸ் வண்டியை இயக்குவது போன்ற துணை மருத்துவப் பணிகளைத் தனியாரிடம் குத்தகைக்கு விடவும் நோயாளிகள் நலச் சங்கங்களுக்கு உரிமை அளிக்கப்படுவதாக தமிழக அரசின் ஆணை குறிப்பிடுகிறது. தனியார்மயம் என நேரடியாகக் குறிப்பிடாமல், தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் தந்திரம் தான் இது.

''கிராமப்புற ஏழை மக்களை அதிகம் பாதிக்கும் மலேரியா, காலரா,

தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

ஆரம்ப சுகாதார நிலையத்தில், வைட்டமின் - ஏ சொட்டு மருந்து ஊட்டப் பெறுவதற்காகக் காத்திருக்கும் நகர்ப்புற ஏழை சிறுவர்கள்.





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 22

**இதழ் 4**

பிப்ரவரி 2007

உள்நாடு
தனிஇதழ்: ரூ.5.00
ஆண்டுசந்தா: ரூ.60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


### அசாம் – உல்ஃபா:

## திசைதவறிய தேசிய விடுதலைப் போர்

கடந்த ஜனவரி 5-8 ஆகிய நான்கு நாட்களில் எழுபதிற்கும் மேற்பட்டவர்களை அசோம் ஐக்கிய விடுதலை முன்னணியினர் (உல்ஃபா) கொன்றிருக்கிறார்கள். கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பீகாரிலிருந்து பிழைப்புக்காக அசாமுக்குப் போய் அசாமிய மற்றும் அங்குள்ள வங்காளி ''பாபு''க்களுக்குச் சேவைசெய்யும் பீகாரி உழைப்பாளிகள். இப்போது அந்தப் பீகாரி தினக்கூலிகள் சாரை சாரையாக கண்ணீரும் கம்பலையுமாக பீகாருக்குத் திரும்புகின்றனர். இந்தக் கொலைகளுக்கு 'உல்ஃபா'வினர் உரிமை பாராட்டிக் கொள்ளவில்லை. அதேசமயம் 'உல்ஃபா' துணைத் தலைவர் பிரதீப் கோகோய், ''இந்தக் கொலைகள் எல்லாமே அசாம் அரசாங்கமே செய்தவைதாம். சமாதான முயற்சியில் உல்ஃபாவுக்கு அக்கறையில்லை என்று காட்டி, அந்த அமைப்பின்மீது அவதூறு கிளப்புவதற்காகச் செய்யப்படும் சதியின் ஒரு பகுதி'' என்றும் கூறியுள்ளார். ஆனால், உல்ஃபாவின் அதிகாரபூர்வ ஏடான ''சுதந்திரம்'' அசாமுக்குள் நுழையும் இந்திபேசும் மக்களைக் கடுமையாக எச்சரித்திருக்கிறது. ''அசாமிய மண் குட்டி ராஜஸ்தானாகவும், குட்டி பீகாராகவும், குட்டி கொல்கத்தாவாகவும் மாறி வருகிறது; இந்தியக் காலனியவாதிகளுக்கும் அசாம் மக்களுக்கும் இடையே போர் நடந்து வரும் இந்தச் சமயத்தில் அசாமுக்குள் பிற மாநிலத்தவர்கள் வருவதால் ஏற்படும் இழப்புகளுக்கு அவர்கள்தாம் காரணமும் பொறுப்பும் ஏற்க வேண்டும்'' என்று அந்த ஏடு எச்சரித்திருக்கிறது. இந்த எச்சரிக்கையையும், கடந்த கால அனுபவங்களையும் வைத்துப் பார்க்கும்போது, தற்போதைய பீகாரிகள் படுகொலைகளுக்குக் காரணம் 'உல்ஃபா'தான் என்றே கருத வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட கொலைகள் 2003-ஆம் ஆண்டுக்குப் பிறகு இரண்டாவது முறையாக இப்போது நடக்கின்றன.

அசாமில் இருந்து அந்நியர்களை - வந்தேறிகளை வெளியேற்றும் இயக்கம் தொடங்கி கால் நூற்றாண்டுக்கும் மேலாகிறது. காலனி ஆட்சிக் காலத்திலேயே வங்காளிகளும் மார்வாடி - குஜராத்திகளும் அசாமில் பெருமளவு குடியேறி பொருளாதார ஆதிக்கம் பெற்றனர். வங்கதேசப் போரின்போது பெருமளவு கிழக்கு வங்க அகதிகள் இலட்சக்கணக்கானோர் குடியேறினர். இத்தகைய வரலாற்று நிகழ்வுகளால் அசாமிய மக்கள் தமது தேசிய இன அடையாளத்தை இழப்பதாகக் குமுறினர். இதன் விளைவாக 1980-களின் ஆரம்பத்தில் அனைத்து அசாம் மாணவர் சங்கத்தின் தலைமையில் ''அந்நியர்களை வெளியேற்றும்'' போர்க்குணமிக்க போராட்டங்கள் வெடித்து, இந்திய அரசையே கலங்கடிக்கச் செய்தன. அந்தப் போராட்டங்களை வங்க தேச அகதிகளுக்கு எதிராக மட்டுமல்ல, குறிப்பாக எல்லா இசுலாமியர்களுக்கும் எதிராகத் திருப்பிவிட ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. பார்ப்பன-பாசிச கும்பல் எத்தணித்தது. பார்ப்பன - பனியா தரகு முதலாளிய ஏகாதிபத்திய நலன்களுக்காக, அரச பயங்கரவாதத்தை ஏவி பல்வேறு தேசிய இனங்களையும் அடக்கி ஒடுக்கி ஏக இந்திய அரசியல் அமைப்பைக் கட்டிக் காத்து வருகிறது. காந்தி-நேரு பரம்பரை காங்கிரசு. ''அந்நியர்களை - வந்தேறிகளை வெளியேற்றும்'' போராட்டம் அசாமிலுள்ள இசுலாமியர்களுக்கும், போடோ முதலிய தேசிய சிறுபான்மை - பழங்குடி இனங்களுக்கும் எதிரானதென்று திரித்து, பிளவுபடுத்தி மோதவிட்டு இரத்தம் குடித்தது; இந்திய உளவுப் படையான ''ரா'' மூலம் ஆயுதங்களும் - பயிற்சியும், நிதியுமளித்து மத்திய அரசுக்கெதிரான போராட்டங்களை அசாமியர்களுக்குள்ளேயான சிவில் யுத்தமாக மாற்றியது.

பல ஆயிரம் பேரைப் பலிகொண்ட இந்தப் பிரச்சினையில் இரண்டு போக்குகள் ஏற்பட்டன. தலைமையில் ஒரு பிரிவு மத்திய ஆட்சியாளர்களாகயிருந்த ராஜீவ் கும்பலுடன் சமரச ஒப்பந்தம் செய்து கொண்டது; அசாம் கண பரிசத் என்ற அரசியல் கட்சி அமைத்துக் கொண்டு தேர்தலில் குதித்து சில ஆண்டுகள் ஆட்சி நடத்தி, இலஞ்ச ஊழலில் மூழ்கி மேலும் மேலும் பிளவுற்று பலவீனமடைந்து விட்டது. இரண்டாவது பிரிவு, இந்திய காலனிய ஆட்சியிலிருந்து பிரிந்து செல்லும் தேசியஇனப் போராட்டமாக இயக்கத்தை வளர்த்தெடுத்து, அதற்காக அசோம் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற தலைமறைவு அமைப்பைக் கட்டி ஆயுதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தியது. தேசிய முதலாளிய சக்தியால் தலைமையேற்கப்பட்ட தேசிய இன விடுதலைப் போராட்டம், தனது இலட்சியத்தையும் அதற்கேற்ற வழிமுறையையும் கைவிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளைப் போல, பஞ்சாபின் காலிஸ்தானிகளைப் போல குறுகிய இனவெறி இயக்கமாகவும், சுத்த இராணுவவாதிகளாகவும் சீரழிந்து போயிருப்பதையே, பிற தேசிய இன உழைக்கும் மக்களைப் படுகொலை செய்வதும், நியாயப்படுத்த இயலாத கொலைகள் புரிவதுமான நிகழ்வுகள் காட்டுகின்றன. நியாயமான தேசிய இனக் கோரிக்கையைக் கையிலெடுத்து, ஒடுக்கும் பெருந்தேசிய அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்துகிறார்கள் என்பதற்காக இவ்வாறு சீரழிந்த இயக்கங்களை ஆதரிப்பது குறுகிய தேசிய இனவெறி பாசிசத்துக்குத் துணைபோவதாகும். ●

www.padippakam.com

# சி.பி.எம்:
# துரோகிகளா? எதிரிகளா?

**நா**யோடு படுத்தவன் உண்ணியோடுதானே எழுந்திருக்க முடியும்? தரகுப் பெருமுதலாளிகளோடும் அந்நிய ஏகபோக நிறுவனங்களோடும் கூடிக் குலாவினால் இரத்தக் கறையோடுதானே தரிசனம் தரமுடியும்? ஆம்! கொலைகாரர்களாகக் காட்சி தருகிறார்கள், மே.வங்கத்தை ஆளும் 'மார்க்சிஸ்டு'கள். உழைக்கும் மக்களின் அரசு என்று மார்தட்டிக் கொண்ட மே.வங்க 'இடதுசாரி' அரசு இன்று இரத்தக் கவிச்சி வீசும் கொலைகார அரசாக நாடெங்கும் நாறுகிறது.

சிங்கூரைத் தொடர்ந்து இப்போது நந்திகிராமத்தில் அடக்குமுறை - கொலைவெறியாட்டம். விளைநிலங்களை ஆக்கிரமித்து விவசாயிகளின் வாழ்வுரிமையைப் பறிக்கும் ஏகாதிபத்திய சேவைக்குப் பெயர் 'தொழில் வளர்ச்சி'! அதை மூடிமறைக்க கோயபல்சையும் விஞ்சும் அண்டப்புளுகுகள்; தகிடுதத்தங்கள். பிணங்களின் மீதேறி சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவுவதில் புதுவேகம்; புது மோகம்.

ஒருவரல்ல, இருவரல்ல; ஆறு பேர் கொலை. 15 முறை போலீசு துப்பாக்கிச் சூடு; தடியடி, கண்ணீர் புகை வீச்சு, 144 தடையுத்தரவு. ஆளும் வர்க்கக் கட்சிகளையே விஞ்சும் வண்ணம் 'மார்க்சிஸ்ட்' கட்சி குண்டர்களின் வெறியாட்டம். வர்க்க விரோதிகள், மக்கள் விரோதிகள் என்று உழைக்கும் மக்களாலேயே குற்றம் சாட்டப்பட்டு காறி உமிழப்படுகிறது, மே.வங்க 'இடதுசாரி' ஆட்சி. இதுதான் போலி கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கம்.

ஏற்கெனவே சிங்கூரில் டாடாவின் கார் தொழிற்சாலைக்காக 997.1 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமித்து, போராடிய விவசாயிகளை ஒடுக்கி, சமூக பாசிஸ்டுகளாகிக் கொக்கரித்த 'மார்க்சிஸ்டுகள்', இப்போது அதேவழியில் ஹால்டியா வட்டாரத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவ மூர்க்கமாக இறங்கியுள்ளனர். சிங்கூரில் போராடிய மக்களையும் எதிர்த்தரப்பினரையும் ஒடுக்கியது போலவே, மிருகத்தனமான ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டால் எதிர்ப்புகளை முறியடித்து விடலாம் என்பதுதான் 'மார்க்சிஸ்டுகள்' வகுத்துக் கொண்ட உத்தி. ஆனால் இந்த துரோகத்தனம் வெகுவிரைவிலேயே அம்பலப்பட்டு, மறுகாலனியாக்கத்தின் கீழ் போலி கம்யூனிஸ்டுகள் எடுத்துள்ள புதிய கைக்கூலி அவதாரம் நாடெங்கும் சந்தி சிரிக்கிறது.

மே.வங்கத்தின் ஹால்டியா வட்டாரத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவி மாநிலத்தைத் தொழில்மயமாக்கப் போவதாக 'இடதுசாரி' அரசு அறிவித்துள்ளது. இச்சிறப்புப் பொருளாதார மண்டலம் 14,500 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ளது. இதில் 10,000 ஏக்கர் நிலம் இந்தோனேஷிய சலீம் குழுமத்துக்கும் 4,500 ஏக்கர் நிலம் ருயா குழுமத்துக்கும் தாரை வார்க்கப்படும். இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்காக விளைநிலங்களைப் பறிகொடுக்கப் போகும் கிராமங்களில் ஒன்றுதான் நந்திகிராமம்.

விளைநிலங்களை ஆக்கிரமித்து விவசாயிகளின் வாழ்வுரிமையைப் பறிக்கும் இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்கு எதிராகக் கடந்த நான்கு மாதங்களாக, இப்பகுதியில் நக்சல்பாரிப் புரட்சியாளர்கள் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டு விவசாயிகளை அணிதிரட்டி வந்தார்கள். இதுதவிர, எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகளும், ஜாமியத் உலேமா-ஐ-ஹிந்த் எனும் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பும், தன்னார்வக் குழுக்களும் சிறப்புப் பொருளாதார் மண்டலத்துக்கு எதிராகப் பிரச்சாரம் செய்து வந்தன.

இப்பகுதியில் கையகப்படுத்தப்படும் நிலங்களுக்கு ஏக்கருக்கு ரூ. 8 முதல் ரூ. 10 லட்சம் வரை வழங்கப்பட உள்ளதாக சி.பி.எம். கட்சியினரே வதந்திகளைப் பரப்பி வந்தனர். இத்தொகுதியின் 'மார்க்சிஸ்ட்' எம்.பி.யான லக்ஷ்மண் சேத், ஏக்கருக்கு ரூ. 4.3 லட்சம் வரை கொடுக்க அரசு தீர்மானித்துள்ளதாகவும், நந்தி கிராமத்தில் பகுதியளவு நிலம் மட்டுமே கையகப்படுத்தப்படும் என்றும் அறிவித்தார்.

இந் நிலையில், ஹால்டியா வளர்ச்சிக் குழுமம் நந்திகிராம வட்டார வளர்ச்சி அதிகாரி (BDO) அலுவலகத்துக்கு ஜனவரி 2-ஆம் நாளன்று, இப்பகுதியில் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவுவதற்கு நிலங்களைக் கையகப்படுத்த விரைவில் செயல்படுமாறு

**சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு எதிராக நந்திகிராம மக்களின் போர்க் கோலம்.**




படிப்பகம்

www.padippakam.com

ஓர் அறிவிப்பை அறிக்கையாக அனுப்பியது. இது, நந்திகிராம வட்டார வளர்ச்சி அதிகாரியின் அலுவலக தகவல் பலகையிலும் ஒட்டப்பட்டது. இதைக் கண்டதும் நந்திகிராம மக்கள் கொதிப்படைந்தனர்.

மறுநாளில் நந்திகிராமத்தை அடுத்துள்ள கர்சக்ரபேரியா கிராமத்தின் பஞ்சாயத்து அலுவலகத்தில் அதிகாரிகள் கூட்டம் நடப்பதைக் கண்ட மக்கள், விளைநிலங்களைக் கையகப்படுத்தவே இக்கூட்டம் நடப்பதாகச் சந்தேகித்து அதிகாரிகளை முற்றுகையிட்டு முழக்கமிட்டு போராடினர். அவர்கள் மீது தடியடி நடத்தி வெறியாட்டம் போட்டது மே.வங்க போலீசு. ஆத்திரமடைந்த மக்கள் அப்பஞ்சாயத்து அலுவலகத்தை அடித்து நொறுக்கி, இரண்டு போலீசு வாகனங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர்.






நந்திகிராமப் படுகொலையைக் கண்டித்து கொல்கத்தா நகரில் நடந்த ஆர்ப்பாட்டத்தை ஒடுக்கும் 'மார்க்சிஸ்டு' போலீசு.

அடுத்தநாளான ஜனவரி 4-ஆம் தேதியிலிருந்து நந்திகிராம மக்கள் சாலை மறியல் போராட்டம் நடத்தியதோடு, கிராமத்தைச் சுற்றி தடுப்பரண்களை எழுப்பிப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். சி.பி.எம். கட்சித் துரோகிகளின் வீடுகளை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்த கிராம மக்கள், இப்பகுதியிலுள்ள இரண்டு சி.பி.எம். கட்சிக் கிளை அலுவலகங்களையும் தீயிட்டுக் கொளுத்தினர்.

சோனாசுரா கிராமத்தில், ''நந்திகிராம நிலப்பாதுகாப்புக் கமிட்டி'' எனும் கூட்டமைப்பின் முன்னணியாளர்கள் கூடி போராட்டத்துக்குத் திட்டமிடுவதை அறிந்த சி.பி.எம். குண்டர்கள், அக்கிராமத்தை அடுத்துள்ள தெகாலி கிராமத்தில் இரகசியமாக அணிதிரண்டனர். ஜனவரி 6-ஆம் தேதியன்று அதிகாலையில் சோனாசுரா கிராமத்துக்கு 250 பேருக்கும் மேலாகத் திரண்டு வந்த சி.பி.எம். குண்டர்கள், அக்கிராம விவசாயிகளது வீடுகளின் மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியதோடு, அலறியடித்துக் கொண்டு தப்பியோடிய மக்கள் மீது நாட்டுத் துப்பாக்கியால் சுட்டனர். இப்பயங்கரவாதத் தாக்குதலில் 6 பேர் கோரமாகக் கொல்லப்பட்டனர். சி.பி.எம். குண்டர்களின் கொலை வெறியாட்டத்துக்கு எதிராக ஜனவரி 8-ஆம் நாளன்று எதிர்க்கட்சிகள் நடத்திய மாநிலம் தழுவிய கடையடைப்புப் போராட்டத்தின்போதும் போலீசு தடியடி நடத்தியதோடு, துப்பாக்கிச் சூடு நடத்தி அடக்குமுறை வெறியாட்டம் போட்டது.

இத்தனைக்கும் பிறகு, முழுப்பூசணிக் காயை சோற்றில் மறைத்த கதையாக, வீண் வதந்தியைப் பரப்பி திரிணாமுல் காங்கிரசாரும் நக்சல்பாரிகளும் வன்முறை வெறியாட்டங்களில் ஈடுபடுவதாகவும், கொல்லப்பட்டவர்கள் சி.பி.எம். ஆதரவாளர்கள் என்றும் கூசாமல் புளுகுகிறார் மே.வங்க சி.பி.எம். முதல்வர்.

ஆனால், கொல்லப்பட்டவர்கள் அனைவரும் போராடிய விவசாயிகள் என்று நந்திகிராம மக்கள் சாட்சியமளிக்கின்றனர். அக்கட்சியின் எம்.பி.யாகிய லக்ஷ்மண் சேத், நந்திகிராமத்தில் நிலம் கையகப்படுத்த எந்த அறிவிப்பும் செய்யப்படவில்லை என்று கோயபல்சையே விஞ்சும் வகையில் அண்டப்புளுகை அவிழ்த்துவிட்டார். சி.பி.எம். கட்சியின் அரசியல் தலைமைக்குழு உறுப்பினரான எச்சூரியும், கட்சியின் அதிகாரபூர்வ நாளேடுகளும் இதுதான் உண்மை என்று திரும்பத் திரும்ப வாந்தி எடுத்தன.

ஆனால், இது அண்டப்புளுகை விஞ்சும் ஆகாசப்புளுகு என்பதை மே.வங்க நாளேடுகள், லக்ஷ்மண் சேத் கையெழுத்திட்டு அனுப்பிய அறிக்கையையும், ஹால்டியா வளர்ச்சிக் குழுமம் வெளியிட்டுள்ள அறிவிப்பையும் படத்தோடு செய்தியாக வெளியிட்டு நாறடித்தன. அதன் பிறகே மே.வங்க முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா, ஹால்டியா வளர்ச்சிக் குழுமம் தன்னிச்சையாக இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாகவும், அதை உடனே ரத்து செய்யுமாறு ஆணையிட்டுள்ளதாகவும் இப்போது பசப்புகிறார். முழுமையான விவரங்களை வெளியிட்டு விவசாயிகளின் ஒப்புதலோடு மட்டுமே நிலம் கையகப்படுத்தப்படும் என்றும் வீண் வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் உபதேசம் செய்கிறார்.

விவசாயிகளின் ஒப்புதலோடு நிலம் கையகப்படுத்தப்படுமா, ஒப்புதல் இல்லாமல் செய்யப்படுமா என்பதல்ல பிரச்சினை. சிறப்புப் பொருளாதார மண்டலம் எனும் மறுகாலனியாக்கச் சூறையாடலை சி.பி.எம். கட்சி ஆதரிக்கிறதா, எதிர்க்கிறதா என்பதுதான் மையமான கேள்வி.

நேற்றுவரை சிறப்புப் பொருளாதார மண்டலத்தை எதிர்ப்பதாகவும், பின்னர் மனிதமுகம் கொண்ட சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவப் போவதாகவும் நாடகமாடிய சி.பி.எம். இப்போது, இதர ஓட்டுக் கட்சிகளை எல்லாம் விஞ்சும் வகையில் அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறுவுவதில் வெறியாக இருக்கிறது. நேற்று

www.padippakam.com

வரை உழைக்கும் மக்களின் அரசாகச் சித்தரிக்கப்பட்ட மே.வங்க 'இடதுசாரி' அரசு. இன்று மே.வங்க உழைக்கும் மக்களாலேயே காறி உமிழப்படுகிறது. பிரபல நாவலாசிரியரான மகாஸ்வேதா தேவி, ''இது பாசிஸ்டு அரசு'' என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறார், மேதாபட்கர். அருந்ததிராய், நீதிபதி சச்சார் - என அறிவுத்துறையினரின் கண்டனத்துக்கு ஆளாகி மே.வங்க போலி கம்யூனிஸ்டு அரசு தனிமைப்பட்டுப் போயுள்ளது.

தரகுப் பெருமுதலாளி டாடா கார் தொழிற்சாலை நிறுவுவதற்காக, சிங்கூரில் விளைநிலங்களை ஆக்கிரமித்து, போராடிய மக்களை மிருகத்தனமாக ஒடுக்கிய மே.வங்க இடதுசாரி அரசு, போராட்டங்கள் வலுக்கத் தொடங்கி மம்தா பானர்ஜி தொடர் உண்ணாவிரதம் இருந்தபோது, சிங்கூர் விவகாரம் பற்றி அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தி இணக்கமாக முடிவை எட்ட விழைவதாக அறிவித்தது. ஆனால், அந்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு டாடா கார் தொழிற்சாலைக்கான கட்டுமானப் பணிகளைத் தொடங்கிவிட்டது. இதற்கெதிரான மீண்டும் போராடிய மக்களைக் கைது செய்து சிறையிலடைத்துள்ளது. இவையெல்லாம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியைச் சீர்குலைக்கும் செயல் என்று குற்றம் சாட்டும் சி.பி.எம். கட்சியினர், தமது கட்சி ஊழியர்களை வைத்து எதிர்போராட்டம் - ஊர்வலம் என்று மூர்க்கமாக இறங்கிவிட்டனர்.

மறுகாலனியாக்கத்தின் கீழ், புரட்சி சவடால் அடித்துக் கொண்ட சந்தர்ப்பவாதிகளாகவும் துரோகிகளாகவும் வலம் வந்து கொண்டிருந்த போலி கம்யூனிஸ்டுகள், இப்போது மறுகாலனியாக்கத்துக்கு விசுவாசமாகச் சேவை செய்யும் எதிரிகளாக புதிய பரிணாமத்தை எட்டியுள்ளார்கள். இதுவரை போட்டு வந்த போலி முற்போக்கு - போலி கம்யூனிச முகமூடிகள் அனைத்தையும் கழற்றி எறிந்துவிட்டு, ஏகாதிபத்தியங்களுக்கும் தரகுப் பெருமுதலாளிக்கும் தொண்டூழியம் செய்வதில் இதர ஓட்டுக் கட்சிகள் அனைத்தையும் விஞ்சி விட்டார்கள் என்பதை சிங்கூர் - நந்திகிராம விவகாரங்கள் நிரூபித்துக் காட்டிவிட்டன.

நாற்பதாண்டுகளுக்கு முன்பு மே.வங்கத்தில் கிளர்ந்தெழுந்த நக்சல்பாரி பேரெழுச்சியானது போலி கம்யூனிஸ்டுகளின் துரோகத்தைத் திரைகிழித்துக் காட்டியது. இன்று அதே மே.வங்கத்தில் தொடரும் சிங்கூர் - நந்தி கிராம மக்களின் போராட்டங்கள், போலி கம்யூனிஸ்டுகளை உழைக்கும் மக்களின் எதிரிகளாக அடையாளம் காட்டிவிட்டது. போலி கம்யூனிஸ்டு கட்சிகளிலுள்ள புரட்சியை நேசிக்கும் அணிகள் உடனடியாகக் கலகத்தில் இறங்கி, சமூக பாசிஸ்டுகளாகச் சீரழிந்துவிட்ட துரோகத் தலைமையைத் தூக்கியெறிய வேண்டும். அதன்மூலம் மார்க்சிய - லெனினியத்தைப் பற்றிப் பாதுகாத்து, மறுகாலனியாக்கத்தை வீழ்த்தும் மகத்தான புரட்சிக்குத் தோள் கொடுக்க முன் வரவேண்டும்.

● பாலன்

# மறுகாலனியாக்கத்தை முறியடிப்போம்! பாசிச 'மார்க்சிஸ்டு'களைத் தோலுரிப்போம்!

## — நந்திகிராமப் படுகொலைகளை கண்டித்து ஆர்ப்பாட்டம்

**வி**வசாயிகளின் விளைநிலங்களைப் பறித்துச் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நிறுவி வரும் மே.வங்க 'இடதுசாரி' அரசுக்கு எதிராக நடந்த போராட்டத்தில், 6 விவசாயிகள் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். இதை மூடிமறைத்து மம்தா கட்சியினரின் வன்முறை - நக்சல்பாரிகளின் வெறியாட்டம் என்று கோயபல்சை விஞ்சும் அண்டப்புளுகை அவிழ்த்துவிட்டு, ஏகாதிபத்திய அடியாளாகச் சீரழிந்துவிட்ட சி.பி.எம். கட்சியினர் தமது பத்திரிகைகளில் பிரச்சாரம் செய்து வருகின்றனர். இதற்குப் பக்கமேளம் வாசித்துக் கொண்டு தமிழகத்தில் ஆங்காங்கே சி.பி.எம். கட்சியினர், மே.வங்கத்தின் தொழில்வளர்ச்சியை சீர்குலைப்பதாகப் போராடும் மக்களையும் எதிர்க்கட்சிகளையும் குற்றம் சாட்டி எதிர்ப்பிரச்சாரம் - ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.



இந்நிலையில், இச்சமூக பாசிஸ்டுகளை அம்பலப்படுத்தியும், விவசாயிகளின் விளைநிலங்களைப் பறித்து நாட்டை மீண்டும் காலனியாக்கவரும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை விரட்டியடிக்க உழைக்கும் மக்களை அறைகூவியும் சாத்தூர் பு.ஜ.தொ.மு. எழுச்சி மிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. தோழர் இராசு தலைமையில் 18.1.07 அன்று மாலை சாத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், சிறப்புப் பொருளாதார மண்டலங்களை எதிர்ப்பதாக நாடகமாடிக் கொண்டே, மே.வங்கத்தில் அதைத் தீவிரமாகச் செயல்படுத்திவரும் சி.பி.எம். கட்சியின் துரோகத்தையும் அதன் சமூக பாசிசப் போக்கையும் அம்பலப்படுத்தி முன்னணியாளர்கள் உரையாற்றினர். வர்க்க உணர்வுள்ள சி.பி.எம். அணிகள் துரோகத் தலைமையைத் தூக்கியெறிந்து விட்டு, புரட்சிகர அமைப்புகளில் அணிதிரண்டு மறுகாலனியாக்கத்துக்கு எதிராகப் போராட முன்வருமாறு இந்த ஆர்ப்பாட்டம் அறைகூவியது. சிறப்புப் பொருளாதார மண்டலத்தால் ஏற்படும் பேரழிவுகளையும், மறுகாலனியாக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் சி.பி.எம். துரோகிகளைத் தனிமைப்படுத்தி முறியடிக்க வேண்டிய அவசியத்தையும் உணர்த்திய இந்த ஆர்ப்பாட்டம் உழைக்கும் மக்களுக்கும் சி.பி.எம். அணிகளுக்கும் விரிந்த பார்வையை அளிப்பதாக அமைந்தது.

- பு.ஜ. செய்தியாளர்,
சாத்தூர்.


படிப்பகம்

● இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் எனும் அடிமைச் சாசனத்தையும் அதன் கொடிய விளைவுகள் பற்றியும் உழைக்கும் மக்களுக்கு உணர்த்திய பு.ஜ.வுக்கு எனது நன்றிகள்.

- விவேகானந்தன், சென்னை.

● பார்ப்பன இந்துக் கோயில்கள் அனைத்தும் தீண்டாமையின் மையங்கள்தான் என்பதை ஜனவரி இதழின் பின் அட்டை எடுப்பாக உணர்த்தியது. நாடெங்கும் தொடரும் தீண்டாமைக் கொடுமைக்கு இன்னுமொரு சாட்சியம்தான் கேரேத கடா கிராமத்தின் ஜெகந்நாதர் கோயில்.

- ஜீவா, ஜெயங்கொண்டம்.

● தகவல் - தொழில்நுட்பத் துறை ஊழியர்களுக்காகச் சங்கம் என்ற பெயரில் ஒரு மனமகிழ் மன்றத்தைக் கட்டியுள்ள சி.பி.எம். கட்சியினர், இங்கே தமிழகத்தில் டாஸ்மாக் சாராயக் கடை ஊழியர்களுக்கும், திருப்பதியில் கோயில் பூசாரிகளுக்கும் சங்கம் கட்டி, சந்தா வசூலித்து பிழைப்பு நடத்துவதை சேர்த்து அம்பலப்படுத்தியிருந்தால், ''ஜாடிக்கேத்த மூடி'' கட்டுரை இன்னும் எடுப்பாக அமைந்திருக்கும். பெரியார் சிலை உடைப்புக்கு எதிராக நடந்த போராட்டம் பற்றிய கட்டுரை உரிய தருணத்தில் சிறப்பாக வெளிவந்துள்ளது.

- இரா. கணேசன், சாத்தூர்.

● பெரியார் சிலை உடைக்கப்பட்ட நிலையில், அதற்கெதிராக இந்துவெறியர்களை எதிர்த்துப் போராடாமல், தி.மு.க. அரசைக் காப்பாற்றக் கிளம்பிய வீரமணி கும்பலின் துரோகத்தனத்தைத் திரைகிழித்துக் காட்டியது சிறப்பு. ம.க.இ.க. மற்றும் அதன் தோழமை அமைப்பினர் இந்து தேசிய நாயகன் இராமனை செருப்பால் அடித்து நடத்திய போராட்டங்கள்தான், இது பெரியார் பிறந்த மண் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது. தனியார்மய - தாராளமய சேவையும் பார்ப்பன சேவையும் தனித்தனியானது அல்ல; அவை ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்பதை சி.பி.எம்.மின் காஞ்சி மட சங்கராச்சாரிக்கு அளித்த அரசு மரியாதை நிரூபித்துக் காட்டுகிறது.

- அலாவுதீன், மணமேல்குடி.

● இந்து மதவெறியர்களின் தேசியத் தலைவன் இராமன் படத்தைச் செருப்பால் அடித்துத் தீயிட்டுக் கொளுத்திய புரட்சிகர அமைப்புகளின் போராட்டமும், இந்துவெறியர்களின் குதர்க்க வாதங்களுக்கு ஆப்பறைந்த கட்டுரையும் மிகச் சிறப்பாக அமைந்துள்ளன. ஒரு வாசகன் என்ற முறையில், உழைக்கும் மக்களிடம் பு.ஜ. இதழை அறிமுகப்படுத்திப் பிரச்சாரம் செய்வது எனது கடமையாக உணர்கிறேன்.

- சம்புகன், சிவகங்கை.




## வாசகர் கடிதம்

● பார்ப்பன மதவெறியர்களிடமிருந்து பெரியார் சிலையைக் காப்பதைவிட, பெரியாரிஸ்டுகளிடமிருந்து பெரியாரைக் காப்பதுதான் முதன்மையான பணி என்பதை பு.ஜ. எடுப்பாக உணர்த்தியது.

- லெனின் காந்தி, திருச்சி.

● தரகுப் பெருமுதலாளி டாடாவின் ஊர்க்காவல் படையினராகச் சீரழிந்துவிட்ட சி.பி.எம். கட்சியில், புரட்சியை நேசிக்கும் அணியினர் இனியும் இருக்க முடியுமா என்று பு.ஜ.வின் கட்டுரைகள் தொடர்ந்து கேள்வி எழுப்புகின்றன. துரோகிகளுக்கு எதிரான இந்த சவுக்கடி தொடரட்டும்.

- இரா.கதிரவன், சென்னை.

● கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக டாடா மார்க்சியம் பேசிக் கொண்டும், பார்ப்பன சேவை செய்து கொண்டும் சி.பி.எம். கட்சியினர் துரோகிகளாகச் சீரழிந்துவிட்டனர். சாயம் வெளுத்த இச்சந்தர்ப்பவாதிகளை உழைக்கும் மக்கள் புறக்கணிக்க வேண்டியதுதான் இன்றைய தேவையாக உள்ளது.

- கோ. நாகராசன், கீழச்சீவல்பட்டி.

● ஜனவரி இதழின் அட்டைப்படமும் வடிவமைப்பும் நேர்த்தியாக அமைந்துள்ளது. பெரியார் சிலை உடைப்புப் பற்றிய கட்டுரை பார்ப்பன மதவெறியர்களையும், சோளக்கொல்லை பொம்மைகளாகிவிட்ட பெரியாரிஸ்டுகளையும் அம்பலப்படுத்தி உணர்வுபூர்வமாக அமைந்துள்ளது. பெரியார் சிலையை வெண்கலத்தில் உருக்கி வார்ப்பதாலோ, இரும்புக் கூண்டுக்குள் அடைத்து வைப்பதாலோ பார்ப்பன மதவெறியை வீழ்த்த முடியாது என்பதை உணர்த்திய இக்கட்டுரை சிறப்பு.

- நிர்மலா, திருச்சி.

● பக்தர்கள் என்ற போர்வையில் இந்து வெறியர்கள் எழுப்பும் அபத்தமான வாதங்களுக்குத் தக்க பதிலடி கொடுத்து அவர்களை அம்பலப்படுத்திக் காட்டுவதாகவும், கையாலாகாத வீரமணி கும்பலைத் தோலுரிப்பதாகவும் வெளியான கட்டுரை பெரிதும் பயனளித்தது. வாசகர் வட்டக் கூட்டத்தின் இறுதியில், ''சி.பி.எம்: சமூக பாசிஸ்டுகள்!'' என்ற தலைப்பில் வழக்குரைஞர் தோழர் இராமலிங்கம் சிறப்புரையாற்றினார். மறுகாலனியாக்கத்தின்கீழ் போலி கம்யூனிஸ்டுகள் எடுத்துள்ள புதிய அவதாரத்தை விளக்கி அவர் ஆற்றிய உரை, துரோகிகளை இனங்காட்டுவதாகவும், புரட்சிகர அமைப்புகளில் அணிதிரள வேண்டிய அவசியத்தை விளக்குவதாகவும், வாசகர்களுக்கு சித்தாந்தக் கல்வியளிப்பதாகவும் அமைந்தது.

- வாசகர் வட்டம், திருச்சி.

● பெரியாரின் வாரிசுகள் எனப்படுவோர், தமது கட்சிக்கும் தொழில் நிறுவனத்துக்கும் பெரியாரை ஒரு வியாபாரச் சின்னமாக பயன்படுத்திவரும் சூழலில், பெரியார் தி.க.வினரும் ம.க.இ.க. முதலான புரட்சிகர அமைப்புகளும் நடத்திய போராட்டங்கள், இவர்கள்தான் பெரியாரின் உண்மையான வாரிசுகள் என்பதை நிரூபித்துள்ளது. மே.வங்கத்தின் சிங்கூரில் டாடாவுக்கு விசுவாச சேவை, கேரளத்தில் பார்ப்பன பயங்கரவாதி ஜெயேந்திரனுக்கு அரசு மரியாதை, தகவல்-தொழில்நுட்பத் துறையில் மனமகிழ்மன்றம் நிறுவியுள்ள சி.ஐ.டி.யு.வின் 'புரட்சிகர' சங்கம் - என சி.பி.எம்.மின் பல்வேறு பரிணாமங்களை வெளிக்கொணர்ந்த ஜனவரி இதழ் சிறப்பு.

- கரிகாலன், தஞ்சை.

● இந்துவெறி இராம.கோபால்ன் வகையறாக்களின் குதர்க்கவாதங்களுக்கு பதிலளித்து எழுதப்பட்ட கட்டுரை சம்மட்டி அடியாக அமைந்துள்ளது.

- ச. பரமசிவம், கோவை.

● இராணுவ வலிமையைக் காட்டி ஏகாதிபத்திய சமூகத்திடம் ஆதரவு பெற்று இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயலும் புலிகள் மற்றும் சிங்கள இனவெறி பாசிஸ்டுகளின் புதிய உத்தியானது, எவ்வாறு எதார்த்த நிலைக்கு எதிரானது என்பதையும், அதனால் ஈழத் தமிழருக்கு நேரும் பேரழிவுகளையும் தலையங்கம் கள நிலைமைகளிலிருந்து துல்லியமாக உணர்த்தியுள்ளது.

- இரா. மணிகண்டன், சூசுவாடி.

www.padippakam.com

# முல்லைப் பெரியாறு: தீர்வு என்ன?

மழை பொய்த்துப் போகும் காலங்களில்தான் காவிரியில் நீர்கேட்டு கர்நாடகாவிடம் கையேந்தும் நிலைமை உள்ளது என்றால், நல்ல மழை பெய்தும் கூட, தமிழகமே கட்டிப் பராமரித்து வரும் முல்லைப் பெரியாறு அணையில் அதன் கொள்ளளவு நீரைத் தேக்கி வைத்துப் பயன்படுத்தும் உரிமையைக் கூட அடாவடியாக மறுக்கிறது, கேரள அரசு. இப்படியே போனால் பாலாறு, காவிரி ஆகியவற்றைத் தொடர்ந்து வைகையும் வறண்டு போய் தமிழ்நாட்டின் பெரும்பாலான நிலப்பரப்பு பாலைவனமாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

இருப்பினும், தேர்தல் நலனுக்காக ஓட்டுக் கட்சிகளும் தமிழக நலனில் அக்கறையுள்ள சில சிறிய அரசியல் அமைப்புகளும் கட்சிகளும் மட்டுமே இது குறித்துப் பேசி வருகின்றன. தமிழகத்தின் பெரும்பான்மையான மக்கள் இது குறித்து அதிகம் தெரிந்து கொண்டு அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம், தமிழக மக்களிடம் அதிகம் செல்வாக்கு செலுத்தும் ஓட்டுக் கட்சிகளும் செய்தி ஊடகங்களும் இந்த எரியும் பிரச்சினையை பரந்துபட்ட மக்களிடம் கொண்டு செல்வதில்லை.

அதே நேரத்தில் கேரளத்து அரசியல் கட்சிகளோ (இடதுசாரிகள் உட்பட) இப்பிரச்சினையை அடித்தட்டு மக்களிடம் திரித்துச் சொல்லி தேசிய இனவெறியைக் கிளப்பி விட்டுள்ளனர். தமிழக அரசியல் கட்சிகளோ, இப்பிரச்சினையை குறைந்தபட்சம் சாமான்ய மக்களுக்குப் புரிய வைக்கவும் முயலவில்லை. இது எப்படி இருக்கிறது என்றால், ''பறித்தவன் பதறியதும், பறிக் கொடுத்தவன் ஊமையாகி விட்டான்'' என்ற வாய்மொழிக்கேற்ப தமிழக ஓட்டுக் கட்சிகளும் அமைதியாகி விட்டன.

முல்லைப் பெரியாறு பிரச்சினையில், உச்சநீதி மன்றத் தீர்ப்பான 142 அடி நீர் அளவு உயர்த்த வேண்டும் என்ற ஆணையை கேரள அரசு நிராகரித்து விட்டது. உச்சநீதி மன்ற தீர்ப்புக்கு பிறகு ஆட்சிக்கு வந்த கருணாநிதியும் சரி, அதற்கு முன்பிருந்த ஜெயாவும் சரி இது குறித்து எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இவர்கள் மௌனம் சாதிப்பது ஏன்? பேசி தீர்க்கலாம் என்று இழுத்தடிப்பது ஏன்?

தேசிய இனவெறியைக் கிளப்பி விடும், நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் கேரள அரசு மீது உச்சநீதி மன்றம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசையும் வலியுறுத்தவும் இல்லை. மத்திய அரசும் இதில், 'கழுவும் மீனில் நழுவும் மீனாகவே' செயல்பட்டு தமிழகத்தின் நியாயமான உரிமையைப் புறக்கணித்து வருகிறது.

அப்படி என்றால் இதில் நமக்கு உரிமையில்லையா? முழு உரிமை உண்டு. இதில் சந்தேகத்திற்கே இடமில்லை. இதன் உண்மை நிலவரம் தான் என்ன?

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் பருவ மழையானது, அடிக்கடி பெய்யாமல் போனதால், விவசாயம் பாதிக்கப்பட்டது. இப்பாதிப்பைப் போக்க, அன்றைய ஆங்கிலேய அரசு அதாவது, சென்னை மாகாண அரசு, மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து உருவாகும் நீரானது, வீணாக அரபிக்கடலில் கலப்பதைத் தடுத்து, தென் மாவட்டங்களின் நீரின் தேவையைப் பூர்த்தி செய்ய முடிவு செய்தது.

இதற்கான இடத்தைத் தெரிவு செய்து, திருவிதாங்கூர் மன்னருடன் சென்னை மாகாண அரசு ஒரு ஒப்பந்தம் போட்டது. (அணை இருக்கும் இடம் திருவிதாங்கூர் மன்னனுக்கே சொந்தமில்லை என்பது வேறு விசயம்). இதனடிப்படையில் உறுதி செய்து கொண்ட பின்பே சென்னை மாகாண அரசு அணையைக் கட்ட முடிவு செய்தது. பென்னி குக் என்ற ஆங்கிலேய பொறியாளர் தலைமையில் 1874-ஆம் ஆண்டு முல்லைப் பெரியாறு அணையைக் கட்ட துவங்கியது.

1895-இல் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்ட இந்த அணையின் நீரை, ஒரு குகையின் மூலமாக திருப்பி, தமிழகத்தின் தென் மாவட்ட விளைநிலங்களுக்கு பயன்படுத்தி கொள்ளும் உரிமையை 999 ஆண்டுகள் வரை - 1886-இல் அக். 9-ஆம் தேதி திருவிதாங்கூர் மன்னருக்கும் - சென்னை

**முல்லைப் பெரியாறு பிரச்சினை தொடர்பாக மைய அரசு கூட்டிய பேச்சு வார்த்தையில் கலந்து கொண்ட தமிழக முதல்வர் மு.கருணாநிதி, கேரள முதல்வர் அச்சுதானந்தன் (இடமிருந்து நான்காவது), மைய நீர்வள அமைச்சர் சைஃபூதீன்சோஸ். (இடமிருந்து மூன்றாவது).**





படிப்பகம்

மாகாண அரசுக்கும் இடையே போடப்பட்ட ஒப்பந்தம் மூலம் உறுதி செய்யப்பட்டது.

முல்லைப் பெரியாறு நீர் தமிழ்நாட்டில் நுழையும் இடத்தில் மின்சாரம் உற்பத்தி செய்யத் திட்டமிட்டது தமிழக அரசு. அதனடிப்படையில், கேரள அரசுடன் 1970 மே 29-இல் தமிழக அரசானது, பழைய ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு புதிய ஒப்பந்தத்தை செய்து கொண்டது. இந்த புதிய ஒப்பந்தத்தின் போது, கேரள அரசோ, ஒரு கோரிக்கையை முன் வைத்தது.

அதாவது, ஏற்கெனவே போட்ட முதல் ஒப்பந்தத்தில் அணைக் கட்டுவதால் நீரில் மூழ்கும் 8000 ஏக்கர் நிலத்திற்கு வாடகையாக, ஒரு ஏக்கருக்கு ரூ. 5 வீதம் ரூ. 40,000-த்தை தமிழக அரசு செலுத்தி வந்தது. அதை தற்போது ஒரு ஏக்கருக்கு ரூ. 30 வீதம் உயர்த்தி தரும்படி கேரள அரசு கோரியது. தமிழக அரசும் இதற்கு ஒப்புக் கொண்டு நீரில் மூழ்கும் 8000 ஏக்கருக்கு ரூ. 30 வீதம் 2,40,000 ரூபாயை ஆண்டுதோறும் இன்றுவரை செலுத்தி வருகிறது.

இந்த ஒப்பந்தத்திற்கு பிறகு, கேரள அரசோ, 1976-இல் தமிழகத்திற்கு வரும் நீரை தடுத்து நிறுத்தி, அதை தானே எடுத்து செல்லும் நோக்கத்தில், 1976-இல், 555 அடி உயரத்தில் (முல்லைப் பெரியாறு அணையை விட 7 மடங்கு பெரியது) இடுக்கி அணையைக் கட்டியது.

இடுக்கி அணைக்குப் போதிய நீர் கிடைக்காததால், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியாகக் குறைக்க, கேரள மின்வாரியத் தலைமைப் பொறியாளர் அறிவுறுத்தியுள்ளார். இடுக்கி அணையில் தேக்கி வைக்கப்படும் நீரைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்றும் ஆலோசனைக் கூறியுள்ளார். இடுக்கி அணைக்குத் தேவையான அளவு நீரைப்பெறும் நோக்கத்தில் தான் கேரள அரசு பல சதிவேலைகளையும், புரளியைக் கிளப்புவதையும் செய்கின்றது.

இடுக்கி அணைக்கு நீரைக் கொண்டு செல்வதற்காக தமிழக வனப் பகுதியில் இருந்த செண்பகவள்ளி அணையை சதித்தனமாக உடைத்து விட்டது, கேரள அரசு. நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு மீண்டும் அந்த அணையைக் கட்டித் தர ஒப்புக் கொண்டு அதற்காக தமிழக அரசிடமிருந்து பணமும் பெற்றுக் கொண்டு இன்னமும் அணையைக் கட்டித் தராமல் ஏய்த்து வருகிறது.

இடுக்கி அணைக்கு நீரைக் கொண்டு செல்வதற்காக பெரியாறு அணைக்கான இயற்கையான நீர்வரத்துப் பாதையை மறித்து கெவி அணை, பம்பா அணை, ஆணைத்தோடு அணை, கட்கி அணை ஆகிய புதிய சிறு அணைகளை கட்டி இயற்கை நீரோட்டத்திற்கு எதிராக உயரமான இடங்களுக்கு இராட்சத 'பம்பு'கள் கொண்டு மலைகளைத் தாண்டி நீரேற்றி இடுக்கி அணைக்கு நீரைக் கொண்டு சென்றது. முல்லைப் பெரியாறு அணையைப் பலப்படுத்தும் ஒப்பந்தத்தை மீறி கட்டுமான பணிகளில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள், பொறியாளர்களைக் கைது செய்தும் வழக்குப் போட்டும் வாகனங்களை பறிமுதல் செய்தும் தொடர்ந்து தொல்லைகள் கொடுத்துக் கொண்டேயிருந்தது. இருந்தபோதும் எம்.ஜி.ஆர்., கருணாநிதி, ஜெயலலிதா ஆகிய ஆட்சியாளர்கள் பொறியியலாளர்கள், அதிகாரிகளின் முறையீடுகளை கண்டு கொள்ளாது தொடர்ந்து கேரள அரசுக்குத் துணையாக தமிழகத்திற்கு துரோகமிழைத்தே வந்திருக்கின்றனர். அணையை இயக்குவது, படகு விடுவது, அணைக்கான பாதைகளை பயன்படுத்துவது — என்று பல உரிமைகளை தாரை வார்த்திருக்கின்றனர்.

அணை பலவீனம் அடைந்து விட்டதாகக் காரணம் காட்டி, கேரள அரசும் தமிழக அரசும் போட்ட ஒப்பந்தபடி அன்றைய எம்.ஜி.ஆர். அரசு முல்லைப் பெரியாறு அணையைப் பலப்படுத்த 1.6 கோடி ரூபாயை ஒதுக்கி, 1241 அடி நீளம் கொண்ட அணைக்கு 10 அடிக்கு ஒரு பில்லர் வீதம், 125 அமுத்தமானப் பில்லர்களை உள்பக்கம் எழுப்பி, 55 அடி அகலம், 155 அடி உயரத்தில், ஒரு சப்போர்ட் அணையை (பேபி டேம்) கட்டி உபரியாக 3 செட்டர்களையும் பொருத்தி மேலும் பலப்படுத்தியது. அவ்வப்போது ஏற்படும் கசிவையும் நிறுத்த சுண்ணாம்பு, சிமெண்டுப் பாலை அணையின் உட்புறத்தில் இறக்கி தொடர்ந்து பலப்படுத்தியும் வந்துள்ளது.

இதை மைய மண் இயங்கியல் வல்லுநர்கள் (இந்த வல்லுநர் குழுவில் கேரள அரசு சார்பில் எம்.கே.பரமேஸ்வரன் இருந்தார்) அதிநவீன கருவிகள் கொண்டு ஆய்வு செய்து பேபி டேமுக்கு வலிமை இருக்கிறது என்று 14 ஜூன் 2000-த்தில் சான்றும் அளித்தனர். இதனடிப்படையில் அணையின் நீர்மட்டத்தை 142 அடி உயர்த்திக் கொள்ள சான்றும் அளித்து விட்டது.

இந்த சான்றை ஏற்றுக் கொண்ட உச்சநீதி மன்றம் 142 அடி நீரை உயர்த்தலாம் என்று 2006-இல் தீர்ப்பும் அளித்து விட்டது. நீதிமன்ற தீர்ப்பை ஏற்க மறுத்து, தீர்ப்பை மறுசீராய்வு செய்யும்படி மனு ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது, கேரள அரசு. மனு செய்தவர்கள் அதன் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் அதை ஏற்பது தானே நியாயமானது. சாதகமாக இருந்தால் ஏற்பது, இல்லையெனில் மறுப்பது என்பது அயோக்கியத்தனம் இல்லையா? 'மேலும் அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை கூட்டி, கேரள நீர்ப்பாசனம் - நீர் சேமிப்புச் சட்டம் என 2003-இல் திருத்தம் கொண்டு வந்தது மோசடி இல்லையா?

இந்த மனுவையும் தள்ளுபடி செய்துவிட்டது உச்சநீதி மன்றம். உச்சநீதி மன்ற தீர்ப்பை ஏற்க மறுப்பதோடு, தமிழகத்தின் நியாயமான பாதிப்பைக் கூடப் பார்க்க மறுக்கிறது.

136 அடியாக நீர் குறைப்பதால், தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய நீர் வரத்து குறைந்து, 1,25,000 ஏக்கர் விளைநிலங்கள் தரிசாகி விட்டன. மின்சாரமும் 140 மெகாவாட் மின் உற்பத்தியானது 56 மெகாவாட் மின் உற்பத்தியாக குறைந்து விட்டது. இதனால் தமிழகத்திற்கு 130.80 கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டதோடு 1980 முதல் 2006 வரை ஏறக்குறைய ரூ. 3561.6 கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும், இந்த நிலத்தையே நம்பி வாழ்ந்து வந்த மதுரை, தேனி, இராமநாதபுரம் மாவட்டத்து மக்களும் வயிற்றுப் பிழைப்புக்காக அண்டை மாநிலங்களைத் தேடி ஓடுகின்றனர். ஆனால், கேரள மக்களுக்காக, தமிழகம் உற்பத்தி செய்து அனுப்பும் உணவுப் பொருட்களுக்கு தேவையான நீரின் அளவோ 511 டிஎம்சியாகும். அந்த நீரையாவது தரவேண்டுமென்ற எண்ணம் கூட இவர்களுக்கு இல்லை.

உலகத் தொழிலாளர்களை ஒன்றுபடச் சொல்லும் மார்க்சிய கோட்பாட்டை சொல்லிக் கொண்டே, இந்திய தொழிலாளர்களைப் பிளவுப்படுத்தும் முதலாளித்துவ தேசிய இனவெறியைப் புகுத்தி கொண்டதன் விளைவு தான் இது என்பதை இவர்கள் உணர மறுக்கின்றனர்.

இவர்களின் தேசிய இனவெறிக்கு ஒத்து ஊதும் வேலையைத்தான் தமிழக சி.பி.எம். நாடாளுமன்ற உறுப்பினர் 'மோகன் அவர்களும், 'உச்சநீதி மன்ற தீர்ப்பை நாடாளுமன்றத்தில் விவாதிப்



பெரியாறு அணையைப் பார்வையிடச் சென்ற தமிழக பொதுப்பணித் துறை அமைச்சர் துரைமுருகனை ''கெரோ'' செய்யும் 'மார்க்சிஸ்ட்' கட்சியினரின் அடாவடித்தனம்.

பது தேசிய ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்கும்' என்கிறார். இதற்கு சபாநாயகரும் ஒத்து ஊதுகிறார். அதே போல் தமிழ் மாநிலத் தலைவர்கள் வரதராஜனும், எம்.பாலகிருஷ்ணனும் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு பிறகும் பேசி தீர்க்க வேண்டும் என்று மடையை மாற்றி விடுகின்றனர்.

படித்தவர்கள் நிரம்பிய கேரள மக்களிடையே அறிவியல்பூர்வமான ஆதாரங்களை மறுத்து, மேலோட்டமான சில வாதங்களை முன் வைத்து பீதியூட்டும் பிரச்சாரம் நடக்கிறது. முல்லைப் பெரியாறு அணை கட்டி முடிக்கப்பட்டு 102 ஆண்டுகளாகி விட்டன; பழங்கால தொழில்நுட்பத்தைக் கொண்டு கட்டப்பட்டது; பூமி அதிர்ச்சி நிகழ வாய்ப்புள்ள பகுதியில் உள்ளது; அணை உடைந்தால் கேரளத்தின் ஐந்து மாவட்டங்களில் வாழும் 35 இலட்சம் மக்களின் உயிரும், பல ஆயிரம் கோடி சொத்துக்களும் அழியும் என்று கூறுகிறார்கள்.

உலகின் எல்லாப் பகுதிகளிலுமே ஏதாவது ஒரு அளவு அதிர்ச்சிக்குள்ளாகும் வாய்ப்புள்ளது; ஆனால் முல்லைப் பெரியாறு அணைக்கு அவ்வாறான வாய்ப்பிருப்பதாக யாரும் நிரூபிக்கவில்லை. மகாராட்டிரம் கொய்னா அணைப்பகுதியில் பல கிராமங்களை விழுங்கிய பூமி அதிர்ச்சி நிகழ்ந்துள்ள போதிலும் அந்த அணை இடிக்கப்படவில்லை, பழமையான தொழில் நுட்பங் கொண்ட அணைகள் இடிக்கப்பட்டதற்குச் சான்றுகள் இருப்பதைப் போலவே, ஆயிரம் ஆண்டுகளாகியும் பாதுகாப்பாகவும் - உறுதியாகவும் தற்போதும் உள்ள அணைகளுக்கும் சான்றுகள் உள்ளன.

ஒப்பந்த காலமான 999 ஆண்டுகளுக்கு, நூறு சதவீதம் எந்தவித ஆபத்தும் பாதிப்பும் இல்லாமல் முல்லைப் பெரியாறு அணை நீடித்திருக்கும் என்று எந்த முட்டாளும் வாதிட மாட்டான். அதேசமயம் நிபுணர்களின் ஆய்வு முடிவுப்படி 152 அடி உயரத்துக்கு நீரைத் தேக்கினாலும் உடனடி ஆபத்தில்லை என்பதுதான் உண்மை. உலகிலுள்ள எல்லா அணைகளுக்கும், பலநூறு மாடிகள் கொண்ட வானுயரக் கட்டிடங்களுக்கும் கூட இது பொருந்தும். சொல்லப் போனால் மனிதனின் கட்டுமானங்கள் எல்லாமே காலத்தாலும் இயற்கை பேரழிவுகளாலும் பாதிக்கப்படக் கூடியவைதாம். எரிமலைப் பூமியாகிய ஜப்பானில், குறிப்பாக டோக்கியோவில் எந்த உத்திர்வாதத்தில் வானுயரக் கட்டுமானங்களும் அணு உலைகளும் நிர்மாணிக்கப்படுகின்றன. நவீன காலத்தில் ஆபத்து விளைவிக்கக் கூடிய கட்டுமானங்கள் எல்லாமே நிபுணர்களால் கண்காணிக்கப்படுவதும், தேவையானபோது தகுந்த பாதுகாப்பு ஏற்படுத்தப்படுவதும்தான் நடைமுறையாக உள்ளது.

அந்த வகையில் முல்லைப் பெரியாறு அணையும் கருதப்பட வேண்டும்; ஆனால் கேரள மக்களிடையே மூட நம்பிக்கை வகையிலான பீதியூட்டப்படுகிறது. முல்லைப் பெரியாறு அணை தகுதியுடைய நிபுணர்களைக் கொண்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளதால், 152 அடி உயரத்துக்கு ஆபத்தின்றி நீரைத் தேக்க முடியும். இதுதவிர தகுதியுடைய பொறியியலாளர்களால் கண்காணிக்கப்பட்டு, இயக்கப்படுகிறது. தேவையான பலப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 15 கோடி கன அடி கொள்ளளவு கொண்ட அணையில் ஏதாவது ஆபத்து ஏற்படுமானால் தேவையான அளவு நீரை தகுந்தநேரத்தில் சீராக வெறியேற்றவும் முடியும்; பெரியாறு அணைக்கு கீழே அதைவிட ஐந்து மடங்கு அதிகமான கொள்ளளவு கொண்ட இடுக்கி அணையும் உள்ளது. இரண்டு அணைக்கும் இடையுள்ள 48 கிலோ மீட்டர் தூரத்திற்கு பல சிறிய தடுப்பணைகள் கட்டி மேலும் உத்தரவாதமாக்கிக் கொள்ள முடியும். எதிர்காலத்தில் கூட, 999 ஆண்டுகளுக்கு தற்போதுள்ள முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பாக நீடிக்காது என்றாலும், தேவையான போது மாற்று அணைகட்டிக் கொள்ளவும் 1886-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி உரிமையுண்டு.

ஆனால் யோக்கியவான்களாகக் காட்டிக் கொள்ளும் சிலர், தற்போதுள்ள முல்லைப் பெரியாறு அணைக்குப் பதிலாக புதியதொரு அணையைக் கட்டிவிடலாம் என்று யோசனைக் கூறுகிறார்கள். இப்படிக் கூறுவது தற்போதுள்ள அணை பாதுகாப்பற்றது என்ற கேரளாவின் நிலையை எவ்வித தொழில்நுட்ப ஆதாரமுமின்றி ஆதரிப்பதாகும். அப்படிப் புதிய அணையைக் கட்டி, பழைய ஒப்பந்தத்திற்குப் பதிலாக புதிய ஒப்பந்தம் போட்டுக் கொண்டு, இடுக்கி அணைக்குத் தேவையான அளவு தண்ணீரைப் பெறுவதை நிபந்தனையாக்குவது; எஞ்சிய தண்ணீரைத் தமிழ்நாட்டிற்கு விற்பது என்ற கேரளாவின் உள்நோக்கத்தையும் ஆதரிப்பதாக உள்ளது. புதிய அணை கட்டினால், தற்போதுள்ள முல்லைப் பெரியாறு அணையில் 152 அடி உயரத்திற்கு நீரைத் தேக்குவதால் தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் அதே அளவு தண்ணீரையும் மின்சாரத்தையும் எவ்வித நிபந்தனையுமின்றி வழங்குவதாக கேரளா உறுதி கூறவில்லை என்பது முக்கியமானது.

கேரளம், கர்நாடகம் ஆகிய இரண்டு மாநிலங்களுமே தமிழ்நாட்டிற்கு தண்ணீரைத் தானம் செய்வதைப் போலவும், ஆகவே தமிழகம் அதை உரிமையாகக் கோர முடியாது; யாசகமாகத்தான் கோர முடியும் என்பதைப் போலவும் நடந்து கொள்கின்றன. காவிரிப் பிரச்சினையில் நீர்ப் பிடிப்பு - மேல்கை பகுதியைக் கர்நாடகம்

www.padippakam.com

கொண்டிருந்தாலும், சர்வதேச நதிநீர் விதிகளின்படி, கடைமடைப் பகுதியான தமிழகத்திற்கு இயற்கையான உரிமையுண்டு. முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் 1886-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி தமிழகத்திற்கு உரிமை உண்டு. மேலும் இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ள கேரளமும் கர்நாடகமும் அதன்படியான நடுவர்மன்றம் மற்றும் உச்சநீதி மன்றத் தீர்ப்புகளை ஏற்று அமலாக்கியே தீரவேண்டும்.

நடுவர்மன்ற மற்றும் உச்சநீதி மன்றத் தீர்ப்புகளை அமலாக்க மறுக்கும் போது, மத்திய அரசு அம்மாநில அரசு மீது இராணுவ நடவடிக்கைகள் உட்பட எல்லாவிதமான நடவடிக்கைகளையம் மேற்கொள்ள வேண்டும்; இதை மத்திய அரசு செய்யாதபோது, மத்திய அரசின் எல்லா அதிகாரங்களையும் தமிழகம் ஏற்க மறுப்பதற்கு எல்லாவித நியாயமும் உரிமையும் உண்டு. இந்த நியாயத்தையும் உரிமையையும் உறுதி செய்வதுதான் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையாகும். இதுவொன்றுதான் இரு வேறு தேசிய இனங்களைக் கொண்ட அண்டை மாநிலங்களுக்கிடையிலான சிக்கல்களை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கான வழியாகும். அவ்வாறின்றி, ''இந்திய தேசிய ஒருமைப்பாட்டை காக்கும் வகையில் மாநில மக்கள் அமைதித் தீர்வு காண வேண்டும்'' என்று பாதிக்கப்படும், பாதிப்பை ஏற்படுத்தும் இரண்டு தரப்பையும் பார்த்து ''தேசிய வாதிகள்'' உபதேசம் செய்கின்றனர்.

பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை என்னும் ஆயுதத்தைக் கையிலெடுப்பது ஒரு நிரந்தர, நீண்டகாலத் தீர்வாக இருக்கும் அதே சமயம் கேரளம், கர்நாடகம் ஆகிய இரண்டு மாநிலங்களுக்கும் எதிராக, பொருளாதார முற்றுகை, பரம்பிக்குளம், ஆழியாறு, மண்ணாறு போன்ற ஆறுகள் வழியே கேரளத்துக்குச் செல்லும் தண்ணீரை மறுப்பது, சபரிமலை உட்பட கேரளாவுக்கான சாலை மற்றும் இரயில் பாதைகளை மறிப்பது போன்ற நடவடிக்கைகளை தமிழக மக்கள் மேற்கொள்ள வேண்டும். அண்டை மாநிலங்களில் இருந்து வரும் தண்ணீர் தமிழகத்திற்கு எவ்வளவு அவசியமோ அதைப்போலவே தமிழகத்திலிருந்து அம்மாநிலங்கள் அடையும் பொருளாதார உதவிகள் அவற்றுக்கு அவசியமானவை என்பதை உணர்த்தியே தீர வேண்டும். இது பழிவாங்கும் செயலல்ல; படிப்பிக்கும் செயலாகும்.

● ஆர்.கே.

### சதாம் படுகொலை!

# ஏகாதிபத்திய கொலைக் குற்றவாளிகளான புஷ்-பிளேர் கும்பலுக்கு எதிராகக் கண்டன ஆர்ப்பாட்டங்கள்

அமெரிக்க மேலாதிக்கத் திமிரின் உச்சகட்டமாக, ஈராக்கின் 'முன்னாள்' அதிபர் சதாம் உசேன் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்ட கொடுஞ்செயலை எதிர்த்து ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு ஆகிய புரட்சிகர அமைப்புகள் கடந்த ஜனவரி 1-2 தேதிகளில் தமிழகமெங்கும் தாங்கள் செயல்படும் பகுதிகளில் சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்டு கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தின.

● திருச்சியில், 2.1.07 அன்று காலை 10 மணியளவில், இப்புரட்சிகர அமைப்புகளும் பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியனும் இணைந்து, புத்தூர் நாலுரோடு அருகே எழுச்சிமிகு முழக்கங்களுடன் உலக மேலாதிக்கப் பயங்கரவாதி புஷ்ஷின் உருவப் பொம்மையைத் தூக்கிலிட்டுக் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின. ஏகாதிபத்திய கொலைக் குற்றவாளிகளான புஷ்-பிளேர் கும்பல் தூக்கிலிடப்படும் வரை மானமுள்ள - நாட்டுப்பற்றுள்ள எந்த மனிதனும் உறங்க முடியாது; உறங்கக்கூடாது!'' என்றும் இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் உள்ளிட்டு அனைத்துத் துரோக ஒப்பந்தங்களையும் கிழித்தெறிந்து மறுகாலனியாக்கத்துக்கு எதிராகப் போராடி, ஏகாதிபத்தியங்களை வீழ்த்த அறைகூவியும் முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர். ம.க.இ.க மையக் கலைக் குழுவினர் பாடிய புரட்சிகர பாடல்கள் போராட்ட உணர்வைத் தட்டியெழுப்பின. பயங்கரவாதி புஷ் உருவப் பொம்மையைத் தூக்கில் போட்டு, செருப்பால் அடித்துத் தீயிட்டு, விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் திரளான உழைக்கும் மக்கள் பங்கேற்று ஏகாதிபத்திய கொலைகாரர்களுக்கு எதிராக தமது வெஞ்சினத்தை வெளிப்படுத்தினர்.

● தஞ்சையில், 2.1.07 அன்று கீழவாசல் காமராசர் சிலை அருகில் ம.க.இ.க., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து கொலைகார புஷ்-பிளேர் கும்பலுக்கு எதிராகக் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின. எழுச்சிமிகு முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்பாட்டத்தில் கண்டன உரையாற்றிய ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன், ஏகாதிபத்திய உலகின் காட்டுமிராண்டித் தனத்தைச் சாடி, ஏகாதிபத்திய காலனிய வாதிகளுக்கு எதிராகப் போராட அறைகூவினார். திரளான உழைக்கும் மக்களும் வணிகர்களும் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம், அமெரிக்கப் பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போராடச் சூளுரைப்பதாக அமைந்தது.

● இராம்நாதபுரம் மாவட்டம் எஸ்.பி. பட்டினத்தில், 8.1.07 அன்று மாலையில், புரட்சிகர அமைப்புகள் இணைந்து தோழர் வேலு அவர்கள் தலைமையில் நடத்திய ஆர்ப்பாட்டத்தில், சதாமுக்குத் தூக்கு தண்டனை என்றால் இலட்சக்கணக்கான ஈராக்கியர்களைக் கொன்ற பயங்கரவாத புஷ்ஷுக்கு என்ன தண்டனை என்று கேள்வி எழுப்பியும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஐக்கியப்பட்டுப் போராட வேண்டிய அவசியத்தை விளக்கியும் முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர். திரளான முஸ்லிம் உழைக்கும் மக்கள் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம் ஏகாதிபத்திய மறுகாலனியாதிக்கவாதிகளை வீழ்த்த அறைகூவுவதாக அமைந்தது.

*-பு.ஜ. செய்தியாளர்கள்*



திருச்சியில்...


படிப்பகம்

www.padippakam.com

## சிறுநீரகத் திருட்டு

# அன்று கொன்றது சுனாமி! இன்று கொல்கிறது அரசு!

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்க்கை அவலமான நிலையில் இருப்பதை, சென்னை பகுதி மீனவர்களிடம் நடந்துள்ள சிறுநீரகத் திருட்டு அம்பலப்படுத்திக் காட்டிவிட்டது. பட்டினியில் இருந்தும், கடனில் இருந்தும் தப்பித்துக் கொள்வதற்காகவே, தங்களின் சிறுநீரகங்களை விற்றுவிட்டதாக மீனவப் பெண்கள் கூறியிருக்கிறார்கள்.

மேகலா என்ற மீனவப் பெண்ணுக்கு உயர் இரத்த அழுத்த நோய் இருந்ததால், அவரின் சிறுநீரகத்தை விலைக்கு வாங்கத் தனியார் மருத்துவமனைகள் மறுத்துவிட்டன. இதனால், அவர் தனது தலைமுடியை ரூ. 500-க்கு விற்று, நிலைமையைச் சமாளித்திருக்கிறார். ''முடி வளர்ந்த பிறகு மீண்டும் விற்பேன்'' என்கிறார், அவர். மானத்தைத் தவிர, மற்ற எதையும் விற்று வாழ வேண்டிய கட்டாயத்தில் மீனவர்களின் வாழ்க்கை தள்ளப்பட்டுள்ளது.

சுனாமிக்குப் பிறகு, தமிழக அரசால் வட சென்னையில் உருவாக்கப்பட்ட சுனாமி நகரில்தான் சிறுநீரகக் கொள்ளை கொடி கட்டிப் பறந்து வருகிறது. எனினும், சுனாமிக்கும் சிறுநீரகக் கொள்ளைக்கும் தொடர்பில்லை என்று காட்டுவதற்காக, சிறுநீரகத்தை விற்றுள்ள 30 பெண்களுள் 4 பெண்கள் தான் சுனாமிக்குப் பிறகு சிறுநீரகத்தை விற்றிருப்பதாக, ஒரு சொத்தையான வாதத்தை தமிழக அரசு முன் வைத்துள்ளது.

தமிழகத்தை சுனாமி தாக்கியவுடனேயே, ஜெயா தலைமையில் இருந்த தமிழக அரசும்; தி.மு.க. அங்கம் வகிக்கும் மைய அரசும் போட்டி போட்டுக் கொண்டு நிவாரண உதவிகளை அறிவித்தன. இதோடு, அரசு சாரா நிறுவனங்களும் நிவாரணப் போட்டியில் குதித்தன. மேலும், மீனவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காகவும்; அவர்களின் சமூக மேம்பாட்டுக்காகவும் உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கிகளிடம் கடன் வாங்க ஒப்பந்தங்கள் போடப்பட்டன. இரண்டு ஆண்டுகள் கழிந்த பிறகு, கூட்டிக் கழித்துப் பார்த்தால், மீனவர்களிடம் சிறுநீரகக் கொள்ளை நடந்திருப்பதும்; தற்காலிகக் குடியிருப்புகள் என்ற பெயரில் மாட்டுக் கொட்டகைகளைவிட கேவலமான இடங்களில் அவர்கள் தங்க வைக்கப்பட்டிருப்பதும்தான் கண் முன் தெரிகிறது.

தமிழகத்தில் சுனாமியால் 66,400 வீடுகள் சேதமடைந்ததாக அரசின் புள்ளி விவரம் கூறுகிறது. சுனாமி தாக்கி இரண்டு ஆண்டுகள் முழுமையாக முடிந்த பிறகும் கூட, வீடு வாசலை இழந்தவர்களுள் மூன்றில் ஒரு பகுதியினருக்குக் கூடத் தமிழக அரசால் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க முடியவில்லை. கட்டி முடிக்கப்பட்ட தொகுப்பு குடியிருப்புகளில் கூட அடிப்படையான வசதிகள் முழுமையாக செய்து தரப்படவில்லை.

''கட்டி முடிக்கப்பட்ட வீடுகளுக்கு குடிநீர் வசதியும், கழிவுநீர் வெளியேற்றும் வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. புதிய குடியிருப்புகளில் பள்ளிக்கூட வசதிகள், மருத்துவ - சுகாதார வசதிகள்; அக்குடியிருப்புகளை நகரத்தோடு இணைக்கும் போக்குவரத்து வசதிகள் செய்து தரப்படவில்லை'' எனத் தமிழக அரசே ஒப்புக் கொண்டுள்ளது. *(தி இந்து, 26.12.07, பக்.5)*

சென்னை - மெரீனா கடற்கரையையொட்டி வாழ்ந்து வந்த மீனவர்களை, கூலித் தொழிலாளர் குடும்பங்களை நகரில் இருந்து 25-30 கி.மீ. தள்ளி துரைப்பாக்கம், செம்மஞ்சேரி போன்ற பகுதிகளில் குடியமர்த்தினார், ஜெயா. துரைப்பாக்கத்தில் குடியமர்த்தப்பட்டவர்கள் போக்குவரத்து வசதி கோரி சாலை மறியலில் ஈடுபட்ட பொழுது, போலீசை ஏவிவிட்டு அவர்களின் மண்டையை உடைத்தார், ஜெயா. ஆட்சி மாறிய பிறகும், இந்த அவல நிலை மாறவில்லை.

செம்மஞ்சேரியில் குடியமர்த்தப்பட்டவர்கள் நகருக்கு வர பேருந்தைப் பிடிக்க வேண்டும் என்றால், தங்களின் வீடுகளில் இருந்து 3 கி.மீ. தூரம் நடந்து வர வேண்டும். அடையாறு, திருவான்மியூர், புரசைவாக்கம் ஆகிய பகுதிகளுக்கு அன்றாடம் கூலி வேலை தேடிச் செல்லும் தொழிலாளர்கள், காலை 9 மணிக்குள் அந்தப் பகுதிக்குச் செல்லவில்லை என்றால் அவர்களுக்கு வேலை கிடைக்காது. ''வேலைக்காக, பல நேரங்களில் பேருந்தை நம்பாமல், 50 ரூபாய் கொடுத்து ஆட்டோ பிடித்துச் செல்வதாகக் கூறுகிறார்'' ராஜாமணி என்ற தச்சுத் தொழிலாளி.

வடசென்னையில் சுனாமி நகரில் தங்க வைக்கப்பட்டுள்ள மீனவர்கள், தொழிலுக்குச் செல்ல வேண்டும் என்றால் 5 கி.மீ தள்ளியுள்ள காசிமேடு கடற்கரைக்கு, அதிகாலை 2-3 மணிக்குள் செல்ல வேண்டும். அந்த நேரத்தில்

**மீனவர்கள் தங்க வைக்கப்பட்டிருக்கும் சென்னை - எண்ணூர் தற்காலிகக் குடியிருப்பு, மழையால் குட்டையாக மாறிவிட்ட அவலம்.**




படிப்பகம்

www.padippakam.com

போக்குவரத்து வசதி இருக்காது. ஆட்டோவில் செல்ல வேண்டும் என்றால் குறைந்தது முப்பது ரூபாய் வேண்டும். இதன் காரணமாகவே, பல மீனவர்கள் தங்களின் பரம்பரைத் தொழிலையே கைகழுவி விட்டதாகக் கூறப்படுகிறது.

மீனவ சமுதாயத்தில், குடும்பத்தை நடத்துவதில், ஆணின் வருமானத்தைவிட, பெண்ணின் வருமானத்திற்கு முக்கியப் பங்குண்டு. ஆண், தனது வருமானத்தைக் குடியிலும், சீட்டாட்டத்திலும் தொலைத்துவிட்டால் கூட, மீனவப் பெண்கள், அன்றாடம் சந்தைக்கு மீனை எடுத்துக் கொண்டு போய் விற்றுக் கிடைக்கும் வருமானத்தில் குடும்ப வண்டியை ஓட்டி விடுவார்கள். ஆனால், சுனாமிக்கு பிறகு மீனவக் குடும்பங்கள் கடற்கரையில் இருந்து வெகு தொலைவில் விசிறியெறியப்பட்டு விட்டதால், மீனவப் பெண்களின் வருமானம் நின்று போய்விட்டது. இதனால்தான், மீனவப் பெண்கள், வாங்கிய கடனை அடைக்கவோ, பட்டினியில்லாமல் குடும்பத்தை நடத்தவோ, தங்களின் சிறுநீரகங்களை விற்க வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டுவிட்டனர்.



வறுமையால் சிறுநீரகத்தை விற்றுவிட்ட மீனவப் பெண்கள் திலகவதி (இடது) மற்றும் கலாவதி.

தென் சென்னைப் பகுதியில் புதிது, புதிதாக முளைத்துவரும் கால்-சென்டர் நிறுவனங்களின் வசதிக்காக, பல கோடி ரூபாய் செலவில், பளபளப்பான அகன்ற தார்சாலைகளைப் போட்டுத் தரும் தமிழக அரசு, துரைப்பாக்கத்திலும், செம்மஞ்சேரியிலும், சுனாமி நகரிலும் குடியமர்த்தப்பட்ட மீனவர்களும், தொழிலாளர்களும் வேலைக்குப் போய் திரும்புவதற்கு ஒரு பேருந்தைக் கூட விட மறுக்கிறது. இதன் மூலம், அவர்களின் வேலை வாய்ப்பினைத் தட்டிப் பறித்துவிட்டு, இன்னொரு புறம் நிவாரணம், உதவி எனப் பேசுவதெல்லாம் மோசடித்தனமாகாதா? தமிழகத் தலைநகர மீனவர்களின் வாழ்க்கையே இவ்வளவு மோசமானதாக இருக்கும்பொழுது, பிற பகுதி மீனவர்களின் வாழ்க்கை வேறெப்படி இருந்துவிட முடியும்?

தமிழகத்தில் நடந்துள்ள சுனாமி நிவாரணப் பணிகளை ஆய்வு செய்திருக்கும் இந்தியத் தலைமை தணிக்கை அதிகாரியே, நிவாரணம் என்ற பெயரில் மோசடிகள் நடந்திருப்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்.

- சுனாமியால் பெரிதும் பாதிக்கப்பட்ட நாகப்பட்டிணம் மாவட்டத்தில், பாதிக்கப்பட்டவர்களுக்குக் கட்டப்பட்ட வீடுகள், பள்ளமான நீர் தேங்கும் பகுதிகளில் இருந்ததால், எவரும் அதில் குடியேறவில்லை. இதனால் பாழான தொகை இரண்டரை கோடி ரூபாய்.
- விழுப்புரம் மாவட்டத்தில் கட்டப்பட்ட 3,026 தற்காலிக வீடுகளில் ஒருவரும் குடியேறாததால், ஒன்றே முக்கால் கோடி ரூபாய் விரயமானது.
- சுனாமியால் இறந்து போனவர்களின் சடலங்களைப் புதைப்பது தொடங்கி, உணவுப் பொருட்கள் வழங்குவது வரையான ஒவ்வொரு நிவாரண நடவடிக்கையிலும் நடந்துள்ள மோசடிகள், குளறுபடிகளை அந்த அறிக்கை பட்டியல் இட்டுள்ளது.

சுனாமிக்குப் பிறகு, தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் மீன் பிடிக்கப் பயன்படுத்தப்படும் படகுகளின் எண்ணிக்கை அதிகரித்த அளவிற்கு, பிடிக்கப்படும் மீன்களின் அளவு அதிகரிக்காததால், மீனவ சமுதாயத்தின் பொருளாதார நிலைமை நசிந்து கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. இதனால், படகு வாங்குவதற்குக் கொடுக்கப்பட்ட கடன் குட்டி போட்டதுதான் கண்ட பலன் என்கிறார்கள் மீனவர்கள்.

உலக வங்கி உத்தரவுப்படி மீனவர்களை கடற்கரையில் இருந்து அப்புறப்படுத்தவும்; மீனவ சமுதாயத்தில் அரசு சாரா நிறுவனங்கள் ஊடுருவி வேலை செய்யவும்; அதிகாரிகள் இலஞ்சம் - ஊழல் - மோசடிகளில் ஊறித் திளைக்கவும்தான் சுனாமி நிவாரணம் பயன்பட்டிருக்கிறது. மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை, அப்பல்லோ மருத்துவமனை போன்ற தனியார் ஐந்து நட்சத்திர மருத்துவமனைகள், மீனவர்களின் இந்த அவல நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, சிறுநீரகத் திருட்டு வியாபாரத்தை நடத்தி வருகின்றன. அரசு, தனது அலட்சியத்தை மூடி மறைக்க, இந்தத் தனியார் மருத்துவமனைகள் மீது பாயப் போவதாக ''பாவ்லா'' காட்டுகிறது. மீனவர்களோ, தங்கள் சிறுநீரகங்களை இதைவிட நல்ல விலைக்கு வாங்க யாராவது வருவார்கள் எனக் காத்துக் கிடக்கிறார்கள்!

• ரஹீம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள், தாமதமின்றி வீடுகளைக் கட்டித்தரக் கோரி சென்னையில் நடத்திய ஆர்ப்பாட்டம்.



''அரசு தோட்டத்தில் விளைந்து கிடக்கும் ஏட்டுச் சுரைக்காய்கள்'' என்ற தொடர் கட்டுரையின் ஐந்தாம் பகுதி தவிர்க்க இயலாத காரணங்களினால் இந்த இதழில் இடம் பெறவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

-ஆசிரியர் குழு.


படிப்பகம்

www.padippakam.com

## சென்னை மாநகர போலீசு:

# ஆங்கிலேய காலனியாதிக்கம் தந்த அவமானச் சின்னம்

சென்னை போலீசு துறை ஆரம்பிக்கப்பட்டு 150-ஆவது ஆண்டு நிறைவடைவதை ஒட்டி ஜனவரி 5-ஆம் நாளன்று சென்னையில் கோலாகலமான விழாவைத் தமிழக அரசு கொண்டாடியது. அரசுத் தலைவர் அப்துல் கலாம் நேரில் வந்திருந்து சிறப்பித்து, போலீசாரை ஒன்பது உறுதி மொழிகள் ஏற்க வைத்தார். சாகச நிகழ்ச்சிகள், கண்காட்சி மற்றும் போலீசுக்கு பதக்கங்கள், புது வீடுகள் - என மக்கள் வரிப்பணத்தில் மஞ்சள் குளித்தது போலீசு. இக்கொண்டாட்டங்களுக்கெல்லாம் தகுதியானதுதானா தமிழக போலீசுதுறை?

சென்னை போலீசு துறையின் வரலாறே, அன்னிய ஆட்சிக்கு எடுபிடி வேலை செய்வதில் இருந்து தொடங்குகிறது. 150 ஆண்டுகளுக்கு முன்னர் கிழக்கிந்திய கம்பெனி, சென்னப் பட்டணக் கோட்டையின் பின்புறம் ஒரு மார்க்கெட்டை நடத்தி வந்தது. அம்மார்க்கெட்டைக் கண்காணிக்க உருவாக்கப்பட்ட 'போலீசு' எனும் அமைப்பே பின்னாளில் ஆங்கிலேய அதிகாரிகளின் தலைமையில் 'சென்னை போலீசு துறை'யாகப் பரிணமித்தது. காலனி ஆட்சியாளர்களின் நலனைக் காக்கவும், விடுதலைக்காகக் குரல் எழுப்பிய சொந்த நாட்டு மக்களின் குரல்வளையை நெறிக்கவும் பாசிச முறையில் பயிற்றுவிக்கப்பட்ட அத்துறை இன்னமும் காலனியத்தின் நீட்சியாகவே திகழ்கின்றது.

சொந்த நாட்டு மக்களைச் சந்தேக வட்டத்துக்குள்ளே வைத்திருக்கவும், அவர்களைத் தேவைப்படும்போது ஒடுக்கி வதைக்கவும் தயாரிக்கப்பட்ட இப்பாசிசப் படை, 1947-க்குப் பிறகும், மாற்றம் ஏதுமின்றி ஆட்சியாளர்களால் மேலும் கொம்பு சீவி விடப்பட்டு, நம் நாட்டு மக்களின் வெறுக்கத்தக்க எதிரியாகவே இன்றும் திகழ்கிறது. ஆட்சியாளர்களின் அநீதிக்கு எதிராக மக்கள் திரளும்போதெல்லாம், அரசின் உறுப்பான இராணுவத்துக்கு நிகராய் போலீசும், போராடும் மக்களை மிருகத்தனமாகச் சித்திரவதை செய்து ஒடுக்குகிறது. போலி மோதல்கள் மூலம் கம்யூனிசப் புரட்சியாளர்களையும், தேசிய இனங்களின் விடுதலைக்காகப் போராடுபவர்களையும் கொன்றொழிப்பதில் முன்னிலையில் இருக்கின்றது.

அரசு பணத்திலிருந்து இவர்களுக்குத் தீனி போடவென்றே மது விலக்குப் பிரிவு, கியூ பிரிவு, வரதட்சணைக் கொடுமைப் பிரிவு, தீண்டாமை ஒழிப்புப் பிரிவு, திருட்டு விசிடி பிரிவு என ஆயிரத்தெட்டு பிரிவுகளாகப் பிரித்து, நூற்றுக்கணக்கான பதவிகளை ஏற்படுத்தியும், மேலும் பலருக்குப் பதவி தருவதற்கென்றே மாவட்டங்களைப் பல துண்டுகளாகப் பிரித்தும், ஆட்சியாளர்கள் இந்த மிருகத்தை செல்லப் பிள்ளையாக வளர்த்து விடுகின்றனர்.

இவ்வாறு வளர்க்கப்பட்ட மிருகம், அவசரநிலை பாசிச ஆட்சிக் காலத்தில் தனது முழு அதிகாரத்தை மக்கள் மீது ஏவி வெறியாட்டம் போட்டது. ஓட்டுக் கட்சித் தலைவர்களும் இதில் இருந்து தப்ப இயலவில்லை. நெருக்கடி நிலைக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த பாசிச எம்.ஜி.ஆரோ, தேவாரம் போன்ற கொலைகார போலீசு கும்பலுக்கு அளவு கடந்த அதிகாரமும், சுதந்திரமும் தந்து, வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களைத் துப்பாக்கிச் சூட்டில் கொல்வது, நக்சல்பாரி இயக்கத்தின் ஆதரவாளர்களைக் கூட விட்டு வைக்காமல் கடத்திச் சென்று கொல்வது போன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகளை நிரந்தரமாக்கினார்.

அதன் பின்னர் மாறி மாறி ஆட்சிக்கு வந்த கருணாநிதியும், ஜெ.வும் போலீசுக்கு போட்டிப் போட்டுக் கொண்டு எண்ணற்ற சலுகைகளை வாரி வழங்கியும், அவர்கள் மேலும் சம்பாதித்துக் கொள்வதற்கு என்றே கந்துவட்டித் தடை சட்டம் போன்ற புதுப்புதுச் சட்டங்களையும் உருவாக்கித் தருகின்றனர்.

நாளடைவில், சமூக விரோதச் செயல்களைச் செய்ய, தனியாகக் கும்பல் ஒன்று இயங்கி வந்த நிலைமை மாறிப் போய், போலீசே அதன் பாத்திரத்தை ஏற்பதுதான் அதிகரித்துள்ளது. தணிக்கைக்கு உட்படாத பெருந் தொகையைக் கொண்டு பொதுமக்களிடையே ஆட்காட்டிகளை உருவாக்குவதும், இருவேறு ரவுடிகளிடையே உள்ள பகையை வளர்த்து விடுவதும், அவர்களில் ஒரு பிரிவை தனக்கும், ஆட்சியாளர்களுக்கும் பயன்படுத்திக் கொண்டு, தேவை நிறைவேறியதும் 'போலி மோதல்' மூலம் ஆளைத் தீர்த்துக் கட்டுவது என்பதுமாக நவீன கிரிமினலாக தமிழகப் போலீசு சீரழிந்துள்ளது.

150-ஆவது ஆண்டு விழாவின் போது அப்துல்கலாம், ''பொது மக்களின் நண்பனாக இருப்பேன்'' என உறுதிமொழி ஏற்கச் சொன்ன அதே போலீசுதான், 'வீரப்பனைத் தேடுகிறோம்' என்ற பேரால் மலைவாழ் மக்களில் நூற்றுக்கணக்கானோரைச் சித்திரவதை செய்து பலரை ஊனமாக்கியது. பலரைக் கொன்று எரித்துத் தடயமே இல்லாமல் சாம்பலாக்கியது. பல பெண்களை வன்புணர்ச்சிக்குள்ளாக்கியது. அதன் வக்கிரம் உச்சத்துக்குப் போய், பெற்ற தாயையும், மகனையும் அம்மணமாக்கி, அவர்களைப் பலர் முன்னால் உறவு கொள்ளச் செய்து ரசித்தது.

அந்தியூர் விஜயா, அண்ணாமலை நகர் பத்மினி என நூற்றுக்கணக்கான அபலைப் பெண்களைக் கொடூர முறையில் வன்புணர்ச்சி செய்து வக்கிர விளையாட்டு ஆடிய போலீசு துறையிடம் போய் ''பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தடுக்கப்பட வேண்டும்'' என்று உரையாற்றுகிறார் அரசவைக் கோமாளி கலாம்.

ஷேர் ஆட்டோ ஓட்டுநர்கள், கால் சென்டரில் பணிபுரியும் பெண்ணைக் கடத்திப் பாலியல் வன்முறை செய்ய முயல்வதாகவும் அவ்வோட்டுநர்களை 'என்கவுண்டர்' செய்து கொன்று, பெண்ணின் கற்பைக் காப்பாற்றுவதாகச் சித்தரித்து, உழைக்கும் ஆட்டோ தொழிலாளரை இழிவுபடுத்திடும் வகையில் ''காவலர் உங்கள் சேவகர்'' என்ற சினிமாவைத் தயாரித்த போலீசுதான், சமீபகாலமாக ''கள்ளத் தொடர்பு காரணமாக, மதுரை இன்ஸ்பெக்டர் மனைவியிடம் விளக்குமாத்துப் பூசை வாங்கிய பெண் எஸ்.ஐ.', 'ஜெயலட்சுமியுடன் குடும்பம் நடத்திய டஜன் கணக்கான போலீசார்'' என வணிகப் பத்திரிகைகளிலேயே தலைப்புச் செய்தியாகிப் பல்லிளித்து நிற்கிறது.

'மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக' இருக்கவும், 'லஞ்ச லாவண்யம் இல்லாமல்' செயல்படவும் போலீசிடம் வேண்டுகோள் வைத்த அப்துல் கலாமுக்கு, ஆதம்பாக்கத்தில் பொது ஜனம் ஒருவரிடம் 1000 ரூபாய் பறிக்க ஒரு போலீசு முயன்றபோது, அங்கே



படிப்பகம்

www.padippakam.com




**போலீசு துறையின் 150-வது ஆண்டு விழா: போலீசு மிருகத்துக்குப் புத்திமதி சொல்லும் அரசவைக் கோமாளி அப்துல் கலாம்.**

வந்த மற்றொரு போலீசு 'என் ஏரியாவில் வந்து எப்படி வாங்கலாம்' என்று பணத்தைப் பங்கிடப் போய், நடுரோட்டில் கட்டிப் புரண்டு சண்டை போட்டதும், எழும்பூர் அல்சாமாலில் நிறுவன அதிபர் ஒருவரிடம் லஞ்சம் வாங்க முயன்ற போலீசு இன்ஸ்பெக்டர், லஞ்ச ஒழிப்புப் போலீசாரிடமிருந்து தப்பித்துத் தெருவில் ஓடியதும் தெரிந்திருக்குமா?

கோவை நகைக்கடை ஊழியர்களிடம் தங்கக் கட்டியைக் கொள்ளையிட்ட சென்னை போலீசு, சென்னைக்கு வந்து நகைகளைக் கொள்ளையிட்ட மதுரை போலீசு, பெசண்ட்நகர் கடற்கரையில் நாலாயிரம் ரூபாயை வழிப்பறி செய்த சென்னை போலீசு, ஓடும் பேருந்தில் பெண்ணைக் கேலி செய்து பொதுமக்களிடம் தர்மஅடி வாங்கிய சென்னை போலீசு, குற்றாலத்தில் குடிபோதையுடன் வெறும் ஜட்டியுடன் குளிக்க முயன்று தகராறு செய்த நெல்லை போலீசு, பொதுமக்களின் புகார்களை ஏற்க மறுத்து சென்னை உயர்நீதி மன்றத்தின் கண்டனத்திற்கு ஆளாகியுள்ள போலீசு, வடசென்னையிலுள்ள கழிப்பறைகளை பினாமிகளை வைத்து கைப்பற்றி, ரௌடிகளைக் கொண்டு அடாவடி கட்டணக் கொள்ளையடிக்கும் போலீசு - எனப் பல அவதாரங்களை எடுத்து வருகிறது தமிழ்நாடு போலீசு. இவர்களின் கேடுகெட்ட இத்தகைய செயல்களை முழுமையாகச் சொல்ல வேண்டுமானால். இதற்கென்றே தனியாக சிறப்பு மலர்தான் வெளியிட வேண்டும்.

பாசிச முறையில் பயிற்றுவிக்கப்பட்ட தமிழகப் போலீசு மிருகம் 1995-இல் கொடியங்குளத்தில், தலித் மக்களின் உடைமைகளைச் சூறையாடியும், குழந்தைகள், வயோதிகர்களை வன்மமாய்த் தாக்கியும், அவர்களின் குடிநீர்க் கிணற்றில் மலத்தைப் போட்டு நிரப்பியும் தனது கோரமான சாதிவெறியைக் காட்டியது. நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடிய மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் 17 பேரை, 1999-இல் ஜாலியன்வாலாபாக் படுகொலைக்கு இணையாக ஆதிக்க சாதிவெறியுடன் தாக்கிக் கொன்று தாமிரபரணி ஆற்றில் வீசி எறிந்தது. குண்டுபட்டி கிராம மக்கள் தேர்தலைப் புறக்கணித்தபோது அந்த ஊரையே தாக்கிச் சூறையாடியது.

கோயம்புத்தூரில் 1997 நவம்பரில் இந்து முன்னணிக் குண்டர்களுடன் கை கோர்த்துக் கொண்டு, 19 முஸ்லிம்களைக் கொன்றும், அவர்களின் உடைமைகளைக் கொளுத்தியும், தனது இந்துவெறிப் பாசிசத்தை உலகுக்குக் காட்டியது, தமிழக போலீசு. பாபர் மசூதி தகர்க்கப்பட்ட 1992-ஆம் ஆண்டு தொடங்கி, முஸ்லிம்கள் பெருவாரியாய் வாழும் கோவைக் கோட்டைமேடு பகுதியை 'அறிவிக்கப்படாத திறந்தவெளிச் சிறைக் கொட்டடி' யாக்கி தடுப்பரண்கள். சோதனைச் சாவடிகள் அமைத்து ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தையும் தினமும் வாட்டி வதைத்து வருகிறது.

அன்னிய செலாவணி மீது கட்டுப்பாடுகள் பல விதித்து வந்த காபிபோசா, ஃபெரா போன்ற சட்டங்கள், உலகமயப் பொருளாதார கொள்கைக்கு ஏற்ற வண்ணம், 1990-க்குப் பின்வந்த ஆட்சியாளர்களால் திருத்தப்பட்டன. சில சட்டங்கள் விட்டொழிக்கப்பட்டன. தனியார்மய, தாராளமய நோக்கங்களுக்கேற்றவாறு தொழிலாளர் நலச் சட்டங்கள் திருத்தப்பட்டன. ஆனால் 150 ஆண்டுகளாக ஒரே மாதிரியான வேலையைச் செய்து வரும் போலீசுக்கு என்று போலீசு சட்டங்களில் எந்தவிதத் திருத்தமும் அரசுக்கு தேவையாய் இருக்கவில்லை.

அன்னியன் அஞ்சி நடுங்கிடக் கப்பல் விட்ட சிதம்பரனாரை 'ராஜதுரோகி'யாகப் பார்த்த போலீசு துறைதான், இன்று அந்நிய 'கோக்'கை எதிர்த்திடும் தேசபக்தர்களையும் தேசத்துரோகிகளாகப் பார்க்கிறது. 'கோக்'கிற்கு எதிராகப் போராடுபவர்களை 'பயங்கரவாதிகள்', என மக்களிடம் போலீசே பிரச்சாரம் செய்கிறது.

பிரிட்டிஷாரை எதிர்த்துக் கூடிய ஆயிரக்கணக்கானோரை ஜாலியன்வாலாபாக்கில் சுட்டு வீழ்த்திய பிரிட்டிஷ் இந்திய போலீசுக்கும், குர்கானில் ஜப்பான் நாட்டு ஹோண்டா நிறுவனத்தில் வேலை நிறுத்தம் செய்த தன் சொந்த நாட்டுத் தொழிலாளர்களின் மண்டையைப் பிளந்த இந்திய போலீசுக்கும் 'ஏகாதிபத்திய நலன் காக்கும்' செயலில்தான் எவ்வளவு ஒற்றுமை!

நாளை, தமிழ்நாட்டில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் போன்ற ஏகாதிபத்திய நலன்காக்கும் திட்டங்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து போராடினால், அவர்களை அடித்து நொறுக்கத்தான், இன்றே தமிழக போலீசுக்கு 100 சொகுசு கார்களை ஹூண்டாய் நிறுவனம் 'எலும்புத் துண்டாக'க் கொடுத்துள்ளது.

வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டு, இந்திய சிப்பாய்கள் மாண்ட முதல் சுதந்திரப் போரின் 150-வது ஆண்டையும் கொண்டாடுகிறது, அரசு. அதேநேரத்தில் இந்த நாட்டில் ஆங்கில ஏகாதிபத்தியம் தொடங்கி வைத்து இன்னமும் ஏகாதிபத்திய நலன் காத்து வரும் அடியாள் படையான போலீசுக்கும் 150-வது ஆண்டையும் அதே அரசுதான் கொண்டாடுகிறது. இதுதான் வேற்றுமையில் ஒற்றுமைபோலும்! இதைவிட பித்தலாட்டம் எதுவும் இருக்க முடியாது; ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல் புரட்சியை முன்னெடுக்காமல், ஏகாதிபத்திய நலன் காக்கும் அடியாள் படையான தமிழகப் போலீசு எனும் வக்கிர மிருகத்தைத் தாக்கி அழிக்கவும் முடியாது.

• இரணியன்

www.padippakam.com

போலீசு:

# ஆர்.எஸ்.எஸ்.இன் சட்டபூர்வ அடியாள்!

கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த மங்களூர் நகரிலும்; அதன் புறநகர்ப் பகுதிகளிலும்; அந்நகரையொட்டி அமைந்துள்ள உல்லால், கோனாஜே ஆகிய ஊர்களிலும் கடந்த அக்டோபர் மாதத்தின் முதல் வாரத்தில் தொடர்ந்து ஐந்து நாட்கள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்ட நேரங்களில் கூட, அப்பகுதிகளில் 144 தடையுத்தரவு அமலில் இருந்தது.

மங்களூர் நகரம் அமைந்துள்ள தெற்கு கன்னட மாவட்டத்தின் பல பகுதிகளில், அக்.4-ந் தேதி தொடங்கி 6-ந் தேதி முடிய பஜ்ரங்தள், ராமா சேனை ஆகிய இந்து மதவெறி அமைப்புகள் நடத்திய முசுலீம் எதிர்ப்புக் கலவரங்கள்தான் இதற்குக் காரணம். அந்தக் கலவரத்தில் இரண்டு முசுலீம்கள் படுகொலை செய்யப்பட்டனர்; முசுலீம்களுக்குச் சொந்தமான கடைகளும், வர்த்தக நிறுவனங்களும் குறி வைத்துத் தாக்கப்பட்டன; கொள்ளையடிக்கப்பட்டன. கலவரத்தை அடக்குவது என்ற பெயரில் நூற்றுக்கணக்கான முசுலீம்கள் கைது செய்யப்பட்டனர்.

அரசோ, போலீசோ எதிர்பாராமல், திடீரென்று நடந்துவிட்ட தாக்குதல் அல்ல இது. 1992-இல் பாபர் மசூதி இடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்து மதவெறி அமைப்புகள் சிறிதும், பெரிதுமாக பல கலவரங்களை கர்நாடக மாநிலத்தில் நடத்தி வந்துள்ளன. இதன் மூலம் தங்களின் செல்வாக்கை வளர்த்துக் கொண்டுள்ள இந்து மதவெறி அமைப்புகள், 2004 சட்டமன்றத் தேர்தலில் தெற்கு கன்னட மாவட்டத்தில் மட்டும் 11 சட்டமன்றத் தொகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டன.

''பசு வதையைத் தடுத்து நிறுத்துவது; மதமாற்றம் நடைபெறுவதைக் கண்காணித்துத் தடுப்பது; முசுலீம் இளைஞர்கள், இந்துப் பெண்களுடன் பேசுவதைக் கூடத் தடை செய்வது'' ஆகிய மூன்று சனாதனக் கட்டளைகளை நடைமுறைப்படுத்துவதில், இந்து மதவெறி அமைப்புகள், இம்மாவட்டத்தில் இணையான அரசாங்கத்தையே நடத்தி வருகின்றன. முசுலீம்களின் வழிபாட்டுத் தலம் அமைந்துள்ள பாபா பூதான்கிரி மலையை, ''இந்து'' வழிபாட்டுத் தலமாக மாற்ற முயற்சித்து வரும் இந்து மதவெறி அமைப்புகள், இதனை, ''தெற்கு அயோத்தி'' என அறிவித்துள்ளன. இந்தப் பின்னணியில் வைத்துதான், இந்து மதவெறி அமைப்புகள் அக்டோபரில் நடத்திய தாக்குதலைப் பார்க்க வேண்டும்.

மங்களூர் நகரின் புறநகர் பகுதியான பாஜ்பே எனுமிடத்தில், இந்துமத வெறி அமைப்புகள், அக். 3-ந் தேதியன்று துர்க்கை அம்மன் ஊர்வலத்தை, பாஜ்பே மசூதி அமைந்துள்ள வீதி வழியாக நடத்தத் திட்டமிட்டன. இந்த ''மத'' ஊர்வலம், மசூதி வழியாக செல்வதற்கு முசுலீம்களிடமிருந்து எதிர்ப்பு வரவில்லை. எனினும், அவர்கள் இந்த ஊர்வலத்தில் பப்பா பேரி என்ற பெயர் கொண்ட முசுலீம், துர்க்கையை வணங்குவது போன்ற படத்தை எடுத்துச் செல்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து, போலீசிடம் புகார் மனு கொடுத்தனர்.

நெடுங்காலத்திற்கு முன்பு, மங்களூர் வட்டாரத்தில் பேரி மொழி பேசும் பப்பா என்ற முசுலீம் வணிகர் வாழ்ந்து வந்ததாகவும், அவர் ஒருநாள் ஆற்றில் படகில் சென்று கொண்டிருக்கையில், அந்த ஆறு இரத்தமாக மாறி, அவரது படகு மேலே செல்ல முடியாமல் நின்று விட்டதாகவும்; அவரது கனவில் துர்க்கை அம்மன் தோன்றியதையடுத்து, அவர் துர்க்கை அம்மனின் பக்தராக மாறி விட்டதாகவும் ஐதீகக் கதையொன்று இப்பகுதியில் வாழும் இந்து-முசுலீம் மக்களிடையே நிலவி வருகிறது. மதச்சகிப்புத்தன்மை, மத நல்லிணக்கத்தின் அடையாளமாக இருந்துவரும் இந்தக் கதையை, இந்து மதவெறியர்கள் இப்பொழுது முசுலீம்களை நக்கல் செய்யப் பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக, துர்க்கை ஊர்வலத்தில், பப்பா பேரி என்ற பெயரில், ஒரு ஏழை முசுலீம் மதகுரு துர்க்கையிடம் இறைஞ்சுவது போன்று வரைந்து, முசுலீம்களை மதரீதியாகப் புண்படுத்த முயன்றனர்.

இந்தப் படத்தை ஊர்வலத்தில் எடுத்து செல்வோம் என இந்து மதவெறிக் கும்பல் பிடிவாதமாக இருந்ததால், ''குறைந்தபட்சம் ஊர்வலம் மசூதிக்கு அருகே வரும் பொழுதாவது, அந்தப் படத்தை காட்சிக்கு வைக்கக்கூடாது'' என முசுலீம்கள் வேண்டுகோள் வைத்தனர். இந்து மதவெறியர்கள் இந்தச் சமரசத்திற்கு ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டனர்.

''இந்தப் பிடிவாதம் ஒரு கலவரத்திற்குத் தூபம் போடும் சதிச் செயல்'' என நன்கு தெரிந்திருந்தும் கூட, அதிகாரவர்க்கம் ஊர்வலத்திற்கு எந்தக் கட்டுப்பாடும் விதிக்காமல், பப்பா பேரி

**மங்களூர் நகரில் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதையடுத்து, அத்தியாவசியப் பொருட்களை வாங்கக் காத்திருக்கும் மக்கள்.**



படத்தோடு ஊர்வலம் மசூதி வழியாகச் செல்ல அனுமதித்தது.

போலீசு அதிகாரிகளின் இந்த ஒத்துழைப்பு, கள் குடித்த (இந்து மதவெறி) குரங்குகளுக்கு, தேள் கடித்த நிலையை உருவாக்கிவிட்டது. ஊர்வலத்தின் பொழுதே, 1,000 பேர் கொண்ட இந்து மதவெறிக் கும்பலொன்று, கைகளில் வாள், குண்டாந்தடி, சோடா பாட்டில்களைத் தூக்கிக் கொண்டு, ஏழு முசுலீம் கடைகளுக்குள்ளும், இரண்டு இந்து கடைகளுக்குள்ளும் புகுந்து கொள்ளையடித்தது. (கொள்ளையடிக்கும் பொழுதுதான் ஆர்.எஸ்.எஸ்.க்கு மதச் சார்பின்மை நினைவுக்கு வரும் போலும்) முகம்மது ஹனிஃப் என்பவருக்குச் சொந்தமான துணிக் கடையில் மட்டும் 15 இலட்ச ரூபாய் பணம் ரொக்கமாக இந்தக் கும்பலால் கொள்ளையடிக்கப்பட்டது.

ஆறு துணை ஆய்வாளர்கள், மாவட்ட போலீசு கண்காணிப்பாளர், மாவட்ட போலீசு கமிசனர் ஆகிய அதிகாரிகள் அடங்கிய 200 பேர் கொண்ட போலீசுப் பட்டாளமே இக்கொள்ளைக்குச் சாட்சியாகவும், பாதுகாப்பாகவும் இருந்தனர். நடந்தது மத ஊர்வலம் அல்ல; இந்து மதவெறியர்கள் நடத்திய பகற்கொள்ளை என்பதற்கு ஒளிப்பேழை பட ஆதாரங்கள் இருந்தபோதும், முதலாளித்துவப் பத்திரிகைகளோ, தமிழ்நாட்டு தினமலர் பாணியில், "மத நல்லிணக்கத்தின் குறியீடான, பப்பா பேரி துர்க்கை அம்மனை வணங்கும் படத்திற்கு முசுலீம்கள் எதிர்ப்பு தெரிவித்ததோடு, மத ஊர்வலத்தையும் தடுத்து நிறுத்திவிட்டதாக" அவதூறையே, செய்தியாக வெளியிட்டன.

அக்.3 அன்று பாஜ்பேயில் நடத்தப்பட்ட கலவரத்தை, பல பகுதிகளுக்கும் விரிவாக்கும் நோக்கத்தோடு, 'ராம சேனை' என்ற இந்து மதவெறி அமைப்பு அக்.6 அன்று கடையடைப்புப் போராட்டத்தை நடத்தியது. அன்று மங்களூர் நகருக்கு அருகில் உள்ள உல்லால் பகுதியில், மூன்று 'இந்து'க் கடைகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. இச்சம்பவம் பற்றி முறையான விசாரணை நடத்தாமல், முசுலீம்கள் மீது குற்றம் சுமத்திய போலீசார், இதற்குத் தண்டனையாக உல்லால் முசுலீம்கள் அனைவரின் மீதும் அரசு பயங்கரவாதத்தை ஏவிவிட்டனர்.

அன்று மாலை, ரமலான் நோன்பை முன்னிட்டு ஆண்கள் மசூதிக்குச் சென்றிருந்த நேரமாகப் பார்த்து, முசுலீம்களின் வீடுகளுக்குள் அத்து மீறி, அதிரடியாக, கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்த போலீசார், வீட்டில் இருந்த பெண்களையும், சிறுவர்களையும், முதியவர்களையும் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினர். "தீவிரவாதிகளை"ப் போல முகத்தை மூடிக் கொண்டு வீடுகளுக்குள் நுழைந்த போலீசு கும்பல், கையில் எடுத்துச் செல்லக் கூடிய பொருட்கள் - செல்ஃபோன்கள், தங்கநகைகள், ரொக்கப் பணம் - அனைத்தையும் கொள்ளையடித்தனர். கமுக்கமாக எடுத்துச் செல்ல முடியாத பொருட்களை - தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி - அடித்து நொறுக்கினர்.

**இராணுவம், நீதித்துறை, போலீசுத் துறை என அரசின் முக்கிய உறுப்புகள் அனைத்தும் காவிமயமாகி வரும் வேளையில், ஆர்.எஸ்.எஸ்.இன் இந்து மதவெறி அரசியலை நடைமுறைப்படுத்த, அக்கட்சிதான் ஆட்சியில் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை!**

இந்தச் சட்டவிரோதத் தாக்குதலையும், திருட்டையும் "தேடுதல் வேட்டை" என்ற பெயரில் மூடி மறைக்கும் முகமாக, 70 பேரை - அவர்களுள் பெரும்பாலோர் சிறுவர்கள் - கைது செய்து, பொய் வழக்கு போட்டு, மங்களூரில் இருந்து 400 கி.மீ தொலைவில் உள்ள பெல்லாரி சிறையில் அடைத்தனர். "கைது" செய்யப்பட்ட முசுலீம்களை ஏற்றிச் செல்வதற்கு கொண்டு வரப்பட்ட பேருந்தில் இருந்த காலியிடங்களை நிரப்புவதற்காகவே மீண்டும் "தேடுதல் வேட்டை" நடத்தப்பட்டு, ஆறு முசுலீம்கள் கைது செய்யப்பட்டனர். போலீசிடம் நிரம்பி வழியும் முசுலீம் வெறுப்புக்கு இதுவொரு சான்று.

முசுலீம்களின் காலனியாகக் கருதப்படும் பந்தரில், தாக்குதலோ, எதிர்த் தாக்குதலோ நடக்காதபொழுதும், அக்.8 அன்று நள்ளிரவில் பந்தர் பகுதியில் வசிக்கும் பேரி மொழி பேசும் முசுலீம்களின் வீடுகளுக்குள் நுழைந்த போலீசார், வீட்டில் இருந்த ஆண்கள் அனைவரையும் சட்டவிரோதமாகக் கைது செய்தனர். அப்படி கைது செய்யப்பட்ட முசுலீம்களுள், அப்துல் ரஷீத், முகம்மது இம்ரான் என்ற இரு இளைஞர்களை பொய் வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றால், "அவர்கள் இருவரும், மங்களூர் நகரின் பல இடங்களில் நடந்த கலவரங்களை அந்நகர மேயர் அஷ்ரஃப் தான் தூண்டிவிட்டதாக எழுதித்தர வேண்டும்" என போலீசாரே பேரம் நடத்தினர்.

மங்களூர் நகரின் புறநகர் பகுதியான ஃபைசல் நகரில், அப்துல் காதர் நடத்தி வரும் "ஏ.கே.ஸ்டோர்ஸ்" என்ற மளிகைக் கடை, அக்.6 அன்று, இந்து மதவெறியர்களால் சூறையாடப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டது. இது பற்றி அப்துல்காதர் கொள்ளையடித்தவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு புகார் கொடுத்த பிறகும், போலீசார் குற்றவாளிகளுள் ஒருவரையும் கைது செய்யவில்லை.

மாறாக, அன்று மாலை அப்துல்காதரின் வீட்டுக்குள் அதிரடியாகப் புகுந்த போலீசார், அவரின் இரண்டாவது மகன் பர்வேஷைக் கைது செய்தனர். அப்துல்காதரின் இரண்டாவது மருமகள் போலீசாரின் அத்துமீறலை எதிர்த்து நின்று கேள்வி கேட்ட பொழுது, அதற்கு போலீசார், "உங்க வீட்டு வாலிப பசங்களுக்குக் கொள்ளையடிக்கவும், பொதுச் சொத்தை நாசப்படுத்தவும் ஏன் கற்றுக் கொடுக்கிறீர்கள்?" என ஆர்.எஸ்.எஸ். பாணியில் அவதூறு செய்து அவமானப்படுத்தினர்.

ஃபைசல் நகரில் வசித்து வரும் இந்துக்களின் சிலரது வீடுகள் அக்.6 அன்று முசுலீம் இளைஞர்களால் தாக்கப்பட்டன. போலீசார், இந்தத் தாக்குதலைக் காட்டி, இந்துக்களின் உயிருக்கும், உடைமைக்கும் ஆபத்து நெருங்கி விட்டதாகப் பீதியூட்டி, அந்நகரைச் சேர்ந்த 30 இந்து குடும்பத்தினரை, வீராநகருக்கு இடம் பெறச் செய்தனர்.

கர்நாடகா மத நல்லிணக்க மன்றம் என்ற அமைப்பு, இந்த இடப்பெயர்ச்சி குறித்து விசாரித்தபொழுது, அந்த 'இந்து'க்கள் "போலீசின் அச்சுறுத்தல், நிர்பந்தத்தினால் தான் தாங்கள் வீரா நகருக்கு இடம் பெயர்ந்திருப்பதாக"த் தெரிவித்தனர். ஆனால், பத்திரிகைகளும், தொலைக்காட்சி நிறுவனங்களும் இந்த உண்மையை மூடி மறைத்து விட்டு, "இடம் பெயர்ந்த

www.padippakam.com

இந்துக்களை அடிக்கடி காட்டி'' ஆர்.எஸ்.எஸ்.இன் சமூக விரோதக் கல வரத்திற்குத் தூபம் போட்டன.

இந்து மதவெறிக் கும்பல் கடைய டைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்த மறுநிமிடமே, பஜ்ரங் தள்-ஐச் சேர்ந்த 100 குண்டர்கள், கூதினாபாலி என்ற இடத்தில் மூடப்பட்டிருந்த 11 முசுலீம் கடைகளின் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்து அக்கடைகளைச் சூறையாடினர். கூதி னாபாலி போலீசு நிலையத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவில் பட் டப்பகலில் பலர் கண் முன்னால் இந்தக் கொள்ளை நடந்த போதிலும் போலீ சார் இதனைத் தடுத்து நிறுத்த முயல வில்லை.

மாறாக, அக்.13 அன்று கூதினாபா லியில் உள்ள ''பி.சி.சாலை பேருந்து நிலையம்'' அருகே ஒரு குண்டு வெடித் தவுடன், அன்று மாலையே முசுலீம் குடியிருப்புக்குள் புகுந்து, பெண்கள், குழந்தைகளைக் கூட விட்டு வைக்கா மல் தாக்கியதோடு, பீடி சுற்றி பிழைக் கும் 20 முசுலீம் தொழிலாளர்களைக் கைது செய்தனர்.

கூதினாபாலியில் பஜ்ரங்தள் நடத் திய பகற்கொள்ளையை மதக் கலவர மாகப் பூசி மெழுகி எழுதிய பத்திரிகை கள், அங்கு நடந்த குண்டு வெடிப்பை ''முசுலீம் தீவிரவாதம்'' எனப் பீதி யூட்டி எழுதின.

ஆர்.எஸ்.எஸ். நடத்திய இந்தக் கல வரத்தில், அதற்குத் துணையாக போலீ சார் நடந்து கொண்டு, முசுலீம்களைத் தாக்கியதை வெறும் மனித உரிமை மீறல் பிரச்சினையாகச் சுருக்கிப் பார்க்க முடியாது. ஆர்.எஸ்.எஸ்.இன் முசுலீம் எதிர்ப்பு - இந்து மதவெறி பாசிச அரசி யல், போலீசு துறை முழுவதும் வேரோடி போயிருப்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது. 1992-இல் நடந்த மும்பய் கலவரத்திலும்; 2002-இல் நடந்த குஜராத் இனப்படு கொலையிலும்; 1987-இல் நடந்த மீரட் கலவரத்திலும் இந்த உண்மை ஏற் கெனவே அம்பலமாகியிருக்கிறது. இராணுவம், நீதித்துறை, போலீசுத் துறை என அரசின் முக்கிய உறுப்புகள் அனைத்தும் காவிமயமாகி வரும் வேளையில், இந்திய அரசை மதச்சார் பற்ற அரசாகக் கருத வாய்ப்பே இல்லை. ஆர்.எஸ்.எஸ்.இன் இந்து மத வெறி அரசியலை நடைமுறைப் படுத்த, அக்கட்சிதான் ஆட்சியில் இருக்கவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை!

•கவி

# தாய்மையை விலை பேசும் உலகமயம்

**பு**திய வேலைவாய்ப்பு; இது, நீங் கள் இதுவரை அறிந்திராத புத்தம்புதிய வேலைவாய்ப்பு. இது ஒரு புதிய உற் பத்தித் துறை. இங்கு பணியாற்ற உயர் கல்வியோ பயிற்சியோ அவசிய மில்லை. இளம் பெண்கள் ஓராண்டு காலத்தில் ரூ. 50,000 முதல் ரூ. 2 இலட்சம் வரை சம்பாதிக்கலாம்.

→ இப்படியொரு விளம்பரத்து டன் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழ கம் பகிரங்கமாக அறைகூவி அழைக்கி றது. குஜராத்தின் மருத்துவ செய லாளர், இது புதிய வகைப்பட்ட தொழில்-வேலைவாய்ப்பு என்றும், அனைவருக்கும் எப்போதுமே ஆதா யம் தரும் சூழல் நிலவுவதாகவும், எல்லா மாநிலங்களுக்கும் இதனைப் பரவலாக்க வேண்டும் என்றும் பரிந்து ரைக்கிறார். பெருநகரங்களில் இப்பு திய வேலைவாய்ப்பைப் பயன்படுத் திக் கொள்ளுமாறு நாளேடுகளில் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. குறிப்பாக, மும்பை மற்றும் குஜராத் தின் ஆனந்த் நகரிலுள்ள பல தனியார் மருத்துவமனைகள் . கிராமப்புறங்க ளுக்குச் சென்று இப்புதிய வேலைக் காக ஆட்களைத் திரட்டத் தொடங்கி விட்டன.

அது என்ன புதிய வேலை வாய்ப்பு? தாய்மையையே வணிகமய மாக்கும் வாடகைத்தாய் என்பதுதான் இப்புதிய வேலைவாய்ப்பு!

குழந்தைப்பேறு இல்லாத வெளி நாட்டுத் தம்பதியினருக்காக, ஒரு இந்தி யப் பெண் கருவைச் சுமந்து, பத்து மாதங்களில் குழந்தையைப் பெற்றுக் கொடுத்துவிட்டு, அதற்காக கணிச மான தொகையை வாங்கிக் கொள்வது தான் வாடகைத்தாய் எனும் புதிய வேலைவாய்ப்பு.

''இன் விட்ரோ கருத்தரிப்புமுறை'' (IVF) எனும் புதிய தொழில்நுட்பம் மருத்துவ அறிவியலில் வளர்ச்சிய டைந்துள்ளது. ஒரு பெண்ணின் கரு முட்டையையும், ஒரு ஆணின் விந்த ணுவையும் தனித்தனியே சேகரித்து, அவற்றை உரிய முறையில் சோதனைக் குழாயில் கருத்தரிக்கச் செய்து, பின்னர் அக்கருவை பெண்ணின் கருப்பையி லிட்டு வளர்த்து தாய்மையடையச் செய்வதே இப்புதிய தொழில்நுட்பமு றையாகும். குழந்தைகள் இல்லாத உள் நாட்டு-வெளிநாட்டுத் தம்பதிகளில், மனைவிக்கு தாய்மையடைய உடற் கூறு ரீதியாக வாய்ப்பில்லாத நிலை யில், கணவன் தனது விந்தணுவைக் கொடுத்து வேறொரு பெண் மூலம் குழந்தைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இத்தொழில் நுட்பத்தால் கிடைத்துள்ளது. இதைப் பயன்படுத்திக் கொண்டு, வாடகைத்தாய் எனும் புதிய வேலை வாய்ப்பை பல தனியார் நிறுவ னங்கள் இந்திய ஆட்சியாளர்களின் பேராதரவோடு உருவாக்கியுள்ளன.

இதன்படி, வாடகைத்தாயின் கரு முட்டையும் உள்நாட்டு-வெளிநாட் டுத் தந்தையின் விந்தணுவும் தனித்த னியே சேகரிக்கப்பட்டு, சோதனைக் குழாயிலிட்டு வளர்த்து பின்னர் வாட கைத்தாயின் கருப்பையிலிடப்படும்; வாடகைத்தாய் அக்கருவைச் சுமந்து குழந்தையைப் பெற்றுக் கொடுத்து விட்டு, அதற்கீடாக உரிய தொகை யைப் பெற்றுக் கொள்வார். இதுதான் ஆரவாரமாக அறிவிக்கப்பட்டு விளம் பரப்படுத்தப்படும் புதிய வேலை வாய்ப்பு.

தாய்மை அடைவது என்பது இதர வேலைகளைப் போன்றதல்ல: அது வேலைவாய்ப்புத் துறையுமல்ல. தாய்மை என்பது மிகவும் சிக்கலானது; உணர்ச்சிப்பூர்வமானது. அது தாயின் வாழ்வு முழுவதிலும் நினைவில் நிற் கக் கூடியது. தாய்மைக் காலத்தில் எண் ணற்ற ஹார்மோன்கள் உருவாக்கும் உணர்வுகள் தாயிடம் பெருந்தாக் கத்தை ஏற்படுத்துகின்றன. பிரசவத்திற் குப் பின் கைக்குழந்தைக்கும் தாய்க்கு மிடையிலான உறவு உணர்ச்சிகள் நிறைந்தது. வாடகைத்தாய் எனும் வியாபாரமானது, அறவியல் மதிப்பீடு களுக்கு எதிராக இத்தகைய உணர்ச்சி பூர்வ உறவுகள் அனைத்தையும் வெட் டிச் சிதைத்து, தாயை வெறும் மனித எந் திரமாகச் சிதைத்து விடுகிறது

இதுவொருபுறமிருக்க, அறவியல் மதிப்பீடுகளுக்கு அப்பாற்பட்டு, வாட



படிப்பகம்

www.padippakam.com



''என மகளின் உயர்கல்விச் செலவுகளை ஈடுகட்ட வாடகைத் தாயாகியுள்ளேன்'' - மருத்துவரிடம் கலந்தாலோசிக்கும் அகமதாபாத்தின் வீணா ராவத்.

கைத்தாயின் உயிருக்கும் உடலுக்கும் ஏற்படும் அபாயங்கள், குழந்தை பிறந்த பின்னர் ஏற்படும் உளவியல் மற்றும் உணர்ச்சிபூர்வ பாதிப்புகள் பற்றி இந்தப் புதிய வேலைவாய்ப்பு அக்கறை கொள்வதில்லை. மேலும், ஏழை நாடுகளில் பெண்களுக்கு பிரசவத்தின்போது சிக்கல்களும் அபாயங்களும் பெருமளவில் உள்ளன. மருத்துவசேவை என்பது ஏழை நாடுகளில் பெயரளவுக்கே உள்ளது. ஏழை நாடுகளில் நிலவும் வறுமையும், ஊட்டச்சத்து இல்லாமையும் தாய்மார்களுக்கு பிரசவ காலத்தில் பெரும்பாதிப்பை விளைவிக்கின்றன: இருப்பினும், இத்தகைய ஏழ்மை நிலையிலுள்ள பெண்கள்தான். பிழைப்புக்கான வேறுவழியில்லாத நிலையில் வாடகைத் தாய்களாகிறார்கள்.

தாய்மையை வியாபாரமாக்கும் இப்புதிய தொழிலை சுவீடன். ஸ்பெயின், பிரான்ஸ், ஜெர்மனி முதலான பல மேற்கத்திய நாடுகள் தடை செய்துள்ளன. அனுமதிக்கப்பட்ட பல முதலாளித்துவ நாடுகளிலும் கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன. கருத்தரிப்பு முறையில் ஏற்பட்டுள்ள புதிய தொழில்நுட்பத்தை வணிகமயமாக்கக் கூடாது என்று வாடகைத்தாய்க்கு சம்பளம் கொடுப்பதை கனடா நாட்டு அரசு தடை செய்துள்ளது; சுய விருப்பத்தின் அடிப்படையில் ஒரு பெண் இதனை ஏற்பதை மட்டுமே அந்நாடு அங்கீகரித்துள்ளது. பிரிட்டனில் இத்தகைய விவகாரங்களைப் பரிசீலிக்க சிறப்புக் கமிட்டிகள் நிறுவப்பட்டு, அதன் ஒப்புதலின் அடிப்படையிலேயே வரம்புக்குட்பட்ட முறையில் வாடகைத்தாய் முறை அனுமதிக்கப்பட்டுள்ளது.

வாடகைத் தாய் முறையை அனுமதிக்கும் பல ஏழை நாடுகளில் கூட, கடுமையான விதிகளும் கட்டுப்பாடுகளும் உள்ளன. அர்ஜெண்டினா, தென் ஆப்பிரிக்கா முதலான நாடுகளில் ஒவ்வொரு வாடகைத்தாய் விவகாரத்தையும் பரிசீலிக்க சிறப்புக் கமிட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால் இந்தியாவில் பெயரளவுக்குக் கூட விதிகளோ, கட்டுப்பாடுகளோ கிடையாது. இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (ICMR) பொதுவில் சில வழிகாட்டுதல்களை மட்டுமே கொடுத்துள்ளது. இவற்றைக் கொண்டு தாய்மையை வணிகமயமாக்கும் தனியார் மருத்துவ நிறுவனங்களையோ, வாடகைத் தாயை தேடி பேரம் நடத்தும் தரகு நிறுவனங்களையோ கட்டுப்படுத்த முடியாது; பாதிப்பு ஏற்பட்டால் தண்டிக்கவும் முடியாது.

குழந்தை பிறந்தபின், குறிப்பிட்ட காலத்திற்கு வாடகைத்தாயின் பொறுப்பில் குழந்தையை விடுவதற்குக் கூட விதிகளையும் கட்டுப்பாடுகளையும் இத்தகைய முறையை அனுமதிக்கும் நாடுகள் பின்பற்றுகின்றன. ஆனால் இந்தியாவில் இத்தகைய பிரச்சினைகள் குறித்த அக்கறையோ, வாடகைத் தாய்முறைக்கான விதிகளோ, கட்டுப்பாடுகளோ இல்லை. அறவியல் மதிப்பீடுகள், வாடகைத்தாயின் உடல்நலப் பாதிப்புகள், இத்தொழிலை முறைப்படுத்துவதற்கான சட்டங்கள், உணர்ச்சிபூர்வ பிரச்சினைகள் குறித்த முறைப்படுத்தல்கள் முதலான எதுவுமே இல்லை. சுருக்கமாகச் சொன்னால், வாடகைத் தாய்க்கு சட்டபூர்வ பாதுகாப்போ, பாதிப்புகளுக்கு நிவாரணமோ எதுவுமே இந்தியாவில் இல்லை. இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு ஏழ்மையும் ஏழைகளும் நிறைந்த இந்தியாவில் வாடகைத்தாய் முறை வேகமாகப் பரவி வருகிறது.

இதற்கேற்ப தனியார் ஐந்து நட்சத்திர மருத்துவமனைகளும் தரகு நிறுவனங்களும் பெருகத் தொடங்கியுள்ளன. குறைந்த செலவில் சிகிச்சையும் குறைந்த விலைக்குப் பெண்களும் கிடைக்கும் என்ற விளம்பரங்களுடன் ''மருத்துவச் சுற்றுலா''க்களை நடத்தும் தரகு நிறுவனங்கள் அதிகரித்து வருகின்றன. குழந்தைப் பேறு இல்லாத வெளிநாட்டுத் தம்பதிகள் இந்தியாவுக்குப் படையெடுக்கின்றனர். வாடகைத் தாயிடம் ரூ. 50,000 முதல் ரூ. 2 லட்சம் வரை பேரம் பேசப்படுகிறது. அதாவது, குறைந்தபட்சம் 1000 அமெரிக்க டாலர். அதேசமயம், இதுபோன்ற வாடகைத் தாய் முறைக்கு அமெரிக்காவில் குறைந்தபட்சம் 20.000 முதல் 30,000 டாலர் வரை கொடுக்கப்படுகிறது. ஏழ்மை காரணமாகவும் கட்டுப்பாடுகள் இல்லாததாலும் இந்தியாவில் வாடகைத் தாய்க்கான ஒப்பந்தக்கூலி மிக மலிவாக உள்ளது. மேலும், இந்த வாடகைத்தாய். வெளிநாட்டு தம்பதிகள் போடும் எல்லா நிபந்தனைகளையும் ஏற்றுச் செயல்பட வேண்டிய கட்டாயத்துக்கும் ஆளாகிறார். கோடி கோடியாய் அந்நியச் செலாவணி கிடைக்கும் துறையாகச் சித்தரிக்கப்படும் மருத்துவச் சுற்றுலாத்துறை, இப்போது மறுஉற்பத்திச் சுற்றுலாத் துறையாக மாறிவிட்டது.

இதனால்தான், அடுத்த சில ஆண்டுகளில் 600 கோடி டாலர் அளவுக்கு வாடகைத்தாய் முறையில் வியாபாரம் பெருகும் என்று பெருமிதத்தோடு அறிவிக்கிறது, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம். ஏராளமாக அந்நியச் செலாவணி கிடைக்கும்; மருத்துவர்கள், தாதிகள். தொழில்நுட்பவாதிகள். பரிசோதனைக்கூடப் பணியாளர்கள் எனப் பலருக்கு வேலைவாய்ப்புப் பெருகும் என்று ஆளும் வர்க்கங்களும் மருத்துவத்துறையினரும் வாடகைத்தாய் தொழிலை ஆரவாரத்துடன் வரவேற்கின்றனர். ஏற்கெனவே நடந்துவரும் சிறுநீரக விற்பனைத் தொழிலை வாடகைத்தாய் தொழில் விஞ்சிவிடும் என்று நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

குஜராத்தின் ஆனந்த் நகரிலுள்ள அகான்க்ஷா கருத்தரிப்பு மையத்தின் தலைவரான டாக்டர் நயனாபடேல், கால் சென்டர் - பி.பி.ஓ.க்களில் வெளி


படிப்பகம்

நாட்டு வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் செய்து தருவதைப் போல, வாடகைத்தாய் எனும் புதிய வணிகம் வேகமாக வளர்ந்து வருவதாகப் பெருமையுடன் குறிப்பிடுகிறார். வாடகைத் தாய்மார்களைக் கொண்டு வியாபாரம் செய்யும் இவர், 1970-களில் ஆனந்த் நகரில் அமுல் நிறுவனம் நடத்திய வெண்மைப் புரட்சிக்குப் (பால் பெருக்குத் திட்டம்) பிறகு இப்போது இந்நகரில் வாடகைத்தாய் புரட்சி நடப்பதாகக் கூறுகிறார். மும்பையிலுள்ள மல்பானி கருத்தரிப்பு மையத்தின் டாக்டர் அஞ்சலி மற்றும் அனிருத்தா ஆகியோர், கடந்த ஈராண்டுகளில் தமது சிகிச்சை மையத்திற்கு வாடகைத்தாயைத் தேடி வரும் வெளிநாட்டினரின் எண்ணிக்கை நான்கு மடங்கு அதிகரித்துள்ளதாக பூரித்துப் போகின்றனர்.

"அவன்-அவள்-அது" கதை போல இத்தொழில் இரகசியமாக நடைபெறுவதில்லை. கவர்ச்சிகரமான விளம்பரங்களுடன் வெளிப்படையாகவே நடக்கத் தொடங்கி விட்டது. புனே நகரிலுள்ள ஒரு கருத்தரிப்பு சிகிச்சை மையம், குழந்தையில்லா வெளிநாட்டுத் தம்பதிகளை அழைப்பதோடு, இளம் இந்தியப் பெண்களை இம்மையத்தின் உறுப்பினராகச் சேர்ந்து பயனடையுமாறு பல்வேறு சிறப்புப் பரிசுகளுடன் அழைக்கிறது. பல்வேறு தனியார் மருத்துவ நிறுவனங்களும் தரகு நிறுவனங்களும் "நீங்கள் வாழ்நாள் முழுக்க சம்பாதிப்பதை விட மிக அதிகமாகச் சம்பாதிக்க முடியும்" என்று கிராமப்புறப் பெண்களை வெளிப்படையாக ஆசைகாட்டி அழைக்கின்றன. மகளின் உயர்கல்விச் செலவுகளை ஈடுகட்டுவதற்காக வாடகைத் தாயாகிய குஜராத்தின் வீணா ராவத், கடன் சுமையிலிருந்து மீள்வதற்காக வாடகைத் தாயாகிய மும்பையின் சேத்னா ஜாதவ் என ஏழைப் பெண்கள் வேறு வழியின்றி தமக்காகவும் தமது குடும்பத்துக்காகவும் தமது உடலை மறுஉற்பத்திக் கூடமாகப் பயன்படுத்திக் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகிறார்கள்.

குழந்தையில்லா வெளிநாட்டுத் தம்பதிகள் இந்தியாவின் ஏழைக் குழந்தைகளைத் தத்தெடுத்து தமது வாரிசாக வளர்க்க முடியும். ஆனால், எனது இரத்தவழி வாரிசு என்ற ஆணாதிக்க சொத்துடைமை வர்க்கத் திமிரும் பணத்திமிரும் சேர்ந்து கொள்ள, அனைத்தையும் பணஉறவாக்கியுள்ள உலகமயம் இப்புதிய அடிமைத் தொழிலை ஏழை நாடுகளில் வேர்விட்டுப் பரவச் செய்துள்ளது. இந்திய ஏழைத் தாய்மார்கள் இந்த வக்கிரத் தொழிலின் கூலி அடிமைகளாக்கப்பட்டுள்ளார்கள்.



இன்று இவர்கள் கிராமப்புற கூலி ஏழைகள்; நாளை...? இத்தகையோரைக் குறிவைத்து தான் வாடகைத்தாய் வியாபாரம் நடத்தும் மருத்துவமனைகள் படையெடுக்கின்றன.

ஒரு வெளிநாட்டுத் தம்பதியினர், ஆண் வாரிசை எதிர்பார்த்து வாடகைத் தாயை ஒப்பந்தக் கூலியாக அமர்த்திக் கொண்டு, அத்தாய்க்கு பெண் குழந்தை பிறந்தால், அந்தக் குழந்தைக்கு யார் பொறுப்பு என்பதற்கான விதிகளோ, சட்டங்களோ இந்தியாவில் இல்லை. கருவிலுள்ள குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்று கண்டறிந்து, பெண் குழந்தை எனில் கருக்கலைப்பு செய்ய வாடகைத் தாயை நிர்பந்தித்தால் அல்லது ஒப்பந்தப்படி கூலி தர மறுத்தால் அதை விசாரிக்கவோ தண்டிக்கவோ எவ்வித சட்டப் பாதுகாப்பும் இந்தியாவில் இல்லை. மேலும், ஒரு வாடகைத் தாய் எத்தனை முறை இவ்வாறு செயற்கை முறையில் கருத்தரிக்கலாம், அதனால் தாயின் உடல்நலத்திற்கு என்னென்ன பாதிப்புகள் ஏற்படும் என்பதைப் பற்றிய அக்கறையோ, விதிகளோ கட்டுப்பாட்டோ எதுவுமில்லை. வாடகைத்தாய் முறையை அனுமதித்துள்ள இதர ஏழைநாடுகளில் கூட, இவ்வாறு 2 முறை மட்டுமே கருத்தரிக்கலாம் என்று விதிகளும் கட்டுப்பாடுகளும் உள்ளன. ஆனால் இந்தியாவில் 5 முறை இவ்வாறு கருத்தரிக்க தாராள அனுமதி தரப்பட்டுள்ளது. அதற்கு மேலும் கருத்தரித்து அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் வாடகைத் தாய்மார்களுக்கு ஆட்சியாளர்கள் சிறப்புப் பரிசுகள் அளித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏறத்தாழ நூறாண்டுகளுக்கு முன்னர் கும்பினி ஆட்சியின்கீழ் நமது முன்னோர்கள் இலங்கை, மலேயா, மொரீசியஸ் முதலான நாடுகளுக்குக் கட்டி இழுத்துச் செல்லப்பட்டு, பாம்பும் அட்டையும் கொடிய விலங்குகளும் நிறைந்த காடுகளில் தள்ளப்பட்டு, தோட்டத் தொழில் செய்யும் அடிமைகளாக்கப்பட்டார்கள். அது காலனியாதிக்கம். இன்று நம்நாட்டு இளம்பெண்கள் வாடகைத்தாய் எனும் மறுஉற்பத்தி அடிமைகளாக மாற்றப்பட்டு வருகிறார்கள். இது மறுகாலனியாதிக்கம். தொழில்நுட்பவாதிகள் ஏற்றுமதி, கூலித் தொழிலாளர்கள் ஏற்றுமதி என்று தொடங்கி இப்போது இந்தியத் தாய்மார்களின் கருவறையும் வர்த்தகப் பண்டமாக மாற்றப்பட்டு விட்டது. இதுதான் மறுகாலனியாக்கம் நாட்டுக்கு அளித்துள்ள 'பரிசு'! இம்மறுகாலனியாக்கத்தை வீழ்த்தாமல் பெண் விடுதலை என்பது ஒருக்காலும் சாத்தியமில்லை என்பதை நாட்டுக்கு உணர்த்தி விட்டு, வாடகைத் தாய்மார்கள் நவீன அடிமைகளாக உழன்று கொண்டிருக்கிறார்கள்.

• குமார்

www.padippakam.com

## சதாம் படுகொலை!

# அமெரிக்காவின் மேலாதிக்கத் திமிரும் இரட்டை வேடமும்

அமெரிக்கா என்றால் நாகரிகம்; அமெரிக்கா என்றால் ஜனநாயகம் என அப்பாவித்தனமாக நம்பிக் கொண்டிருப்பவர்களின் பித்தைக் கூடத் தெளிய வைக்கும் வகையில், சதாமின் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. சதாம் அவமானப்படுத்தப்பட்டுத் தூக்கில் தொங்கவிடப்பட்டதைத் தொலைக்காட்சியில் பார்த்தவர்களுக்கு, அமெரிக்காவின் வன்மமும், திமிரும் புரிந்திருக்கும். அந்தக் காட்சியைப் பார்த்த பிறகும், அமெரிக்காவின் வக்கிரமான கொலைவெறியைப் புரிந்து கொள்ள முடியாதவர்களுக்குப் புரிய வைப்பதற்காக, ஜார்ஜ் புஷ், ''சதாமின் தூக்கு, ஈராக்கின் ஜனநாயகத்தை நோக்கிய பயணத்தில் இன்னொரு மைல் கல்'' என்ற பொன்மொழியை உதிர்த்தார். ஈராக்கின் ஜனநாயகத்தை மதிப்பிட வேண்டும் என்றால், அங்கு அமெரிக்கா நடத்திவரும் படுகொலைகளைக் கணக்கிட வேண்டும் போலும்!

முசுலீம்களுக்கு உரிய புனிதமான நோன்பு நாளில் சதாமைத் தூக்கில் போட்டதன் மூலம், ஜார்ஜ் புஷ், தனது முசுலீம் எதிர்ப்பு கிறித்தவ மதவெறியை மீண்டும் பகரங்கமாக உலகிற்குக் காட்டிக் கொண்டிருக்கிறார். இந்த மதச் சகிப்புத்தன்மையற்ற காட்டுமிராண்டித்தனத்துக்கு எதிராக உலகெங்கிலும் கண்டனக் குரல்கள் எழுந்தது ஒருபுறமிருக்க, தூக்கு தண்டனையை சதாம் எதிர்கொண்ட விதமும்; தன்னை ஏளனம் செய்தவர்களை சதாம் மடக்கிய விதமும், பொதுமக்கள் மத்தியில் அவர் மீதான மதிப்பையும், அனுதாபத்தையும் உயர்த்தி விட்டது. சதாமின் சர்வாதிகார ஆட்சியை எதிர்த்து ஜனநாயகத்திற்காகப் போராடிய ஈராக்கியர்கள் கூட, சதாமிற்கு அமெரிக்கா வழங்கிய தூக்கு தண்டனையை ஆதரிக்க மறுத்துள்ளனர். சதாமின் தூக்கு, தனது முகத்தில் இப்படிக் கரியைப் பூசிவிடும் என ஜார்ஜ் புஷ்ஷே எதிர்பார்த்திருக்க மாட்டார்.

''ஒரு நாடு இன்னொரு நாட்டை ஆக்கிரமிக்கும் பொழுது, ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டின் அதிபரை, ஆக்கிரமித்த நாடு விசாரிக்கக் கூடாது'' என போர் பற்றிய ஜெனிவா ஒப்பந்தம் குறிப்பிடுகிறது. ஜார்ஜ் புஷ் இந்தச் சர்வதேச ஒப்பந்தத்தை மயிரளவிற்குக் கூட மதிக்கவில்லை என்பது ஒருபுறமிருக்க, சதாமைத் தூக்கில் போட வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே, ஈராக் கிரிமினல் உச்சநீதி மன்றத்தையும் அதற்கான விதிகளையும் உருவாக்கினார்.

போர்க் குற்றங்களை விசாரிப்பதற்காகவே இந்தச் சிறப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும், ''ஜூலை 17, 1968-க்கும், மே 1, 2003-க்கும் இடைப்பட்ட காலங்களில் நடத்தப்பட்ட போர்க் குற்றங்களை, மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை மட்டுமே விசாரிக்கும் அதிகாரம் கொண்டதாக,'' இந்நீதிமன்றத்தின் அதிகார வரம்பை மட்டுப்படுத்தும் சட்டம் உருவாக்கப்பட்டது.

ஈராக் மீது அமெரிக்கா தொடுத்த இரண்டாவது வளைகுடா போர் மே 1, 2003 அன்றோடு முடிவடைந்துவிட்டதாக ஜார்ஜ் புஷ் அறிவித்தார். எனவே, அந்த தேதிக்குப் பிறகு, ஈராக்கை ஆக்கிரமித்துத் தங்கியிருக்கும் அமெரிக்கப் படைகள் நடத்தி வரும் போர்க் குற்றங்களை, படுகொலைகளை ஈராக்கின் எந்தவொரு நீதிமன்றமும் விசாரிப்பதைத் தடுப்பதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கம்.

சதாமின் ஆட்சியின்பொழுது, ஈரானுக்கு எதிராகவும், குர்து இன மக்களுக்கு எதிராகவும் நடத்தப்பட்ட போர்க் குற்றங்களின் பின்னே அமெரிக்காவின் கை இருந்தது என்பது உலகமே அறிந்த உண்மை. எனவே, சதாமின் போர்க் குற்றங்களை விசாரிக்கும் பொழுது, அக்குற்றங்களோடு தொடர்புடைய அமெரிக்கர்களை விசாரிப்பதைத் தடுப்பதற்காக, போர்க் குற்றம் சுமத்தப்பட்ட நபர், ஈராக்கில் வசிப்பவராக இருந்தால் மட்டுமே, நீதிமன்றம் விசாரிக்க முடியும் என்ற விதியும் உருவாக்கப்பட்டது.

அமெரிக்காவின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப்பட்ட இந்தச் சிறப்பு நீதிமன்றத்தில், ஈராக்கிலுள்ள துஜைல் கிராமத்தைச் சேர்ந்த 148 ஷியா முசுலீம்கள், சதாம் ஆட்சியின் பொழுது படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டது. இவ்வழக்கில் சதாமும், அவரது அரசாங்கத்தைச் சேர்ந்த ஏழு அதிகாரிகளும் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டிருந்தனர். ஷியா முசுலீம் நாடான ஈரானுக்கு எதிராக, அமெரிக்கா ஆதரவோடு சதாம் போர் நடத்தி வந்தபொழுதுதான் இப்படுகொலை நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏறத்தாழ ஒரு ஆண்டுகாலம் நடந்த இந்த வழக்கை விசாரிக்க மூன்று நீதிபதிகள் அடுத்தடுத்து நியமிக்கப்பட்டனர். இந்நீதிபதிகளுக்கு இவ்வழக்கை எப்படி நடத்துவது என்பது குறித்து இங்கிலாந்

**மரண தண்டனை தீர்ப்பைக் கண்டித்து வாதாட விடாமல், நீதிமன்ற அதிகாரியால் தடுக்கப்படும் சதாம் ஹுசைன்.**





படிப்பகம்

www.padippakam.com

தில் பயிற்சி அளிக்கப்பட்டது. எனினும், முதலாவதாக நியமிக்கப்பட்ட "நீதிபதி" ரிஸ்க்ர் முகம்மது அமின் வழக்கை விசாரிப்பதில் சற்று தாராளமாக நடந்து கொண்டதால், பதவியில் இருந்து விலகி விடுமாறு நிர்பந்திக்கப்பட்டார். இரண்டாவதாக நியமிக்கப்பட்ட "நீதிபதி", "என்ன காரணத்தினாலோ" பதவியை ஏற்றுக் கொள்ளவே மறுத்துவிட்டார். மூன்றாவதாக நியமிக்கப்பட்ட குர்து இனத்தைச் சேர்ந்த "நீதிபதி" ராஃப் அப்துல் ரஹ்மான் வெளிப்படையாகவே ஒருதலைப்பட்சமாக நடந்து கொண்டார். ஈராக்கின் அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து கொண்டு செயல்பட்டு வரும் "கிரிமினல் குற்றங்கள் விசாரணை அலுவலகம்" இவ்வழக்கு விசாரணையைக் கண்காணித்து வந்தது.


சதாம், தான் விருப்பப்படும் வழக்குரைஞர்களை நியமித்துக் கொள்ள கடுமையான நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. அதேவேளையில், சதாமுக்காக வாதாடிய வழக்குரைஞர்களுள் இரண்டு பேர் மர்மமான முறையில் கொல்லப்பட்டனர். சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய சதாம் அனுமதிக்கப்படவில்லை. இந்தக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியதோடு, "இந்த வழக்கு விசாரணையே கயவாளித்தனமானது" எனப் புகழ் பெற்ற அமெரிக்க மனித உரிமை வழக்குரைஞர் ராம்ஸே கிளார்க் சாடியதால், (சதாமுக்காக வாதாடிய) அவர், விசாரணை நடந்து கொண்டிருந்தபொழுதே 'நீதிமன்றத்தில்' இருந்து வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தப்பட்டார்.

துஜைல் படுகொலையில் சதாமுக்கு நேரடி தொடர்புண்டு என அமெரிக்கா சுமத்தியிருந்த குற்றச்சாட்டு, போதிய சாட்சிகளோடும், ஆதாரங்களோடும் நீதிமன்ற விசாரணையில் நிரூபிக்கப்படவில்லை. எனினும், இப்படுகொலை தொடர்பாக அவருக்கு அதிகபட்ச தண்டனை - மரண தண்டனை விதிக்க வேண்டும் என்பதற்காகவே, "சதாம் அளவுக்கு அதிகமான பலப் பிரயோகத்தைப் பயன்படுத்தினார்" என்ற வாதம் முன் வைக்கப்பட்டது. இந்த வாதப்படி சதாமுக்கு மரண தண்டனை விதிக்கலாம் என்றால், ஈராக்கில் 1,30,000 துருப்புகளை இறக்கிவிட்டு போர்க் குற்றங்களைப் புரிந்துவரும் ஜார்ஜ் புஷ்ஷுக்கும் மரண தண்டனை விதிக்கலாம்.

"உள்நோக்கத்தோடு திட்டம் போட்டு குடிமக்களைக் கொல்லவில்லை என்ற வாதத்தை முன்வைத்து சதாமின் போர்க் குற்றங்களை நியாயப்படுத்த முடியாது" என சதாமை விசாரித்த நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது. சதாமுக்கு இந்த வாதம் பொருந்தாது என்றால், ஈராக்கில் அமெரிக்கப்படை நடத்தி வரும் போர்க் குற்றங்களில் இருந்து தப்பிக்க, இதே வாதத்தை ஜார்ஜ் புஷ் கேடயமாகப் பயன்படுத்தி வருவதையும் அனுமதிக்க முடியாது.

•••

சதாமுக்கு மரண தண்டனை அளிக்கப்படுவதற்குச் சில நாட்கள் முன்னதாக, ஈராக்கின் "பிரதமர்" நௌரி அல்-மாலிகி, "அமெரிக்காவின் ஒப்புதல் இன்றி, தனது அரசால் ஒரு படையணியைக் கூட நகர்த்த முடியாது" என்று கூறி, ஈராக்கின் இறையாண்மையை வெட்ட வெளிச்சமாக்கினார். இப்படிப்பட்ட ஒரு பொம்மை அரசு, அமெரிக்காவின் சம்மதமும், உத்தவும் இன்றி சதாமுக்கு மரண தண்டனை வழங்கியிருக்க முடியுமா?



**"சதாம் ஹுசைனைக் கொல்ல அமெரிக்க போர்க் குற்றவாளிகளுக்கு யார் அதிகாரம் கொடுத்தது?" என்ற முழக்கத்துடன் அமெரிக்காவின் நியூயார்க் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.**

சதாம் தூக்கு தண்டனை கூடத்திற்குள் அனுப்பி வைக்கப்பட்ட கடைசி நிமிடம் வரை அமெரிக்க இராணுவக் கைதியாகத்தான் வைக்கப்பட்டிருந்தார். சதாம் இறந்த பிறகு, அவரது சடலத்தைக் கூடத் தனது கட்டுப்பாட்டின் கீழ் எடுத்துக் கொண்டது, அமெரிக்க இராணுவம். நீதிமன்ற விசாரணை தொடங்கி சதாமின் சடலம் மண்ணுக்குள் போடப்பட்டு மூடப்படும் வரை, அனைத்துமே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கண்காணிப்பின் கீழ் நடந்திருக்கும் பொழுது, சதாம் தூக்கு மேடையில் ஷியா முசுலீம்களால் அவமதிக்கப்பட்டது மட்டும் அமெரிக்காவின் சம்மதம் இன்றி நடந்திருக்க முடியுமா?

"சதாம் தூக்கு மேடையில் கண்ணியமாக நடத்தப்பட்டிருக்கலாம்" என முதலைக் கண்ணீர் வடிக்கிறார், ஜார்ஜ் புஷ். ஆனால், கண்ணியத்தையும், பண்பாட்டையும், மனித உரிமைகளையும் பற்றிப் பேச, அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு என்ன தகுதி இருக்கிறது?

சதாம் அமெரிக்க இராணுவத்தால் பிடிக்கப்பட்ட பொழுது, பரிசோதனை என்ற பெயரில், அவர் தலையில் பேன் ஊறுகிறதா என்பது தொடங்கி, அவரை நிர்வாணப்படுத்தாதது மட்டும்தான் பாக்கி என்ற வகையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் அவரை அவமானப்படுத்தியது.

சதாமின் ஆட்சியின்பொழுது, ஈராக் மீது அமெரிக்கா திணித்த பொருளாதாரத் தடையுத்தரவால் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான ஈராக்கிய குழந்தைகள் இறந்து போயின. இந்தப் பிஞ்சுக் குழந்தைகளின் சாவை, "ஈராக் கொடுக்கத்தக்க விலைதான்" என்று கூறி வக்கிரமாக நியாயப்படுத்தியது, கிளிண்டன் ஆட்சி.

அமெரிக்க இராணுவம் அபு-கிரைப் சிறைச்சாலையில் நடத்திய வக்கிரமான சித்திரவதைகள், ஃபலுஜா, ஹதிதா நகரங்களில் நடத்திய பச்சைப் படுகொலைகள் - இவையெல்லாம் ஒருபுறமிருக்க, கடந்த மூன்று ஆண்டுகளில் அமெரிக்க ஆக்கிரமிப்பினாலும்,


படிப்பகம்

www.padippakam.com

அது தூண்டிவிட்டு நடத்தி வரும் இனக் கலவரத்தாலும் ஏறத்தாழ ஆறரை இலட்சத்துக்கும் அதிகமான ஈராக்கியர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர். 18 இலட்சம் ஈராக்கியர்கள் நாட்டைவிட்டு வெளியேறி, அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். 16 இலட்சம் ஈராக்கியர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக அலைகின்றனர்.

அறிவுத்துறையினர் என்ற வர்க்கமே ஈராக்கில் இருக்கக்கூடாது எனக் கங்கணம் கட்டிக் கொண்டு அலைகிறது, அமெரிக்க ஏகாதிபத்தியம். பேராசிரியர்கள், மருத்துவர்கள், விஞ்ஞானிகள், பத்திரிகையாளர்கள் என அறிவுத்துறையின் பல்வேறு பிரிவைச் சேர்ந்த 592 அறிஞர்கள், அமெரிக்க இராணுவத்தாலும், அதன் கூலிப் படைகளாலும் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். "ஈராக்கியர்களைக் கொன்று குவிப்பதில் சதாமைச் சுண்டைக்காயாக்கி விட்டார், ஜார்ஜ் புஷ்" என்கிறார் ஹாய்தா ஜங்கானா என்ற நாவலாசிரியர்.

ஈராக்கின் மீது ஆக்கிரமிப்புப் போரை நடத்துவதற்காகவே "பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்கள்" என்ற பொய்யை, அமெரிக்க கோயபல்சுகள் கட்டியமைத்தனர். அந்தப் புளுகு அம்பலமான பிறகு, ஆக்கிரமிப்பை தொடர்வதற்காக, "சதாம் அல்-காய்தாவின் தோழனாகவும், உலக அமைதியின் வில்லனாகவும்" அமெரிக்காவால் சித்தரிக்கப்பட்டார். சதாமின் கதையும் முடிந்த பிறகு, "மேற்காசியா முழுவதுமே அமெரிக்காவைத் தாக்குவதற்கான உந்துவிசைப் பலகையாக மாறி வருவதால், அமெரிக்கப் படைகளை உடனடியாக விலக்கிக் கொள்வது சாத்தியம் இல்லை" என ஆக்கிரமிப்பு தொடர்வதை நியாயப்படுத்துகிறார், ஜார்ஜ் புஷ்.

ஆங்கிலேய காலனியாதிக்கவாதிகள் இந்தியாவை ஆளப் பிரித்தாளும் சூழ்ச்சியைப் பயன்படுத்தியதைப் போல, அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈராக்கில் ஷியா-சன்னி முசுலீம்களிடையே இனமோதலைத் தூண்டிவிட்டு நடத்தி வருகிறது. இந்த இனமோதலை மேலும் ஊதிவிடும் நோக்கத்தோடு தான், சதாம் ஷியா முசுலீம்களால் தூக்கில் போடப்படுவதையும்; தூக்கு மேடையில் அவர் ஷியா முசுலீம்களால் அவமானப்படுத்தப்பட்டதையும் அனுமதித்ததோடு, அக்காட்சியை ஒளிபரப்பவும் செய்தது, அமெரிக்கா. ஈராக்கின் எண்ணெய் வயல்களை அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களின் தனிச் சொத்தாக மாற்றுவதற்காகவே, ஈராக் நாட்டை, ஷியா-சன்னி - குர்து பகுதிகளாகக் கூறுபோடவும், சதி செய்து வருகிறது.

ஈராக் மட்டுமின்றி லெபனானில் ஹிஸ்புல்லா போராளிகளுக்கு எதிராகப் போராட, அந்நாட்டின் அரசுக்கும், ஹிஸ்புல்லா எதிர்ப்புக் குழுக்களுக்கும் சி.ஐ.ஏ., மூலம் பணத்தைக் கொடுத்துக்



பாக்தாத் நகரில் அமெரிக்கத் துருப்புகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட சிறுவன்.

கொம்பு சீவிவிடுகிறது; பாலஸ்தீனத்தில் ஹமாஸ் குழுவினருக்கு எதிராக ஃபதா குழுவினருக்கு ஆதரவும் ஆயுதமும் வழங்கி வருகிறது. இதன் மூலம், மேற்காசியாவில் நடந்துவரும் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களைச் சகோதர யுத்தங்களாக மாற்றிவிடச் சதி செய்து வருகிறது, அமெரிக்கா.

அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு நடந்த தேர்தலில், குடியரசுக் கட்சி தோல்வியடைந்ததையடுத்து, ஜார்ஜ் புஷ் தனது ஈராக் கொள்கையை மாற்றிக் கொண்டு விடுவார் என முதலாளித்துவப் பத்திரிகைகள் அனைத்தும் ஆருடம் கூறி வந்தன. ஆனால், ஜார்ஜ் புஷ், ஈராக்குக்கு மேலும் 20,000 துருப்புகளை அனுப்ப உத்தரவிட்டிருப்பதன் மூலம் அமெரிக்க ஜனநாயகத்தின் மாய்மையை உடைத்தெறிந்து விட்டார். மேலும் சோமாலியாவைத் தாக்கியதன் மூலம் 'தீவிரவாதத்துக்கு எதிரான போரை' ஆப்பிரிக்கா கண்டத்துக்கும் ஏற்றுமதி செய்துள்ளார்.

அமெரிக்க மக்களின் ஈராக் போர் எதிர்ப்பை ஓட்டுக்களாக அறுவடை செய்து கொண்ட ஜனநாயகக் கட்சியோ, இந்த ஆக்கிரமிப்பு போருக்கு ஒரு மனித முகமூடியை மாட்டிவிடும் நரித்தனத்தில் இறங்கியிருக்கிறது. ஈராக் எண்ணெய் வயல்களை அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்கள் ஏக போகமாக்கிக் கொள்ளும் வண்ணம், அந்நாட்டின் எண்ணெய் வயல்களை அரசிடமிருந்து பிடுங்கித் தனியார்மயமாக்கிவிட்டு, அதன் பிறகு மெல்ல மெல்ல அமெரிக்கப் படைக்ளை விலக்கிக் கொள்ள வேண்டும் என்பதுதான் எதிர்த்தரப்பின் திட்டம்.

அமெரிக்க ஏகாதிபத்தியம், தனது முன்னாள் கூட்டாளியான சதாமை, "கண்ணியமற்ற முறையில்" தூக்கில் போட்டதன் மூலம், தனது "நட்பு நாடுகளுக்கு" மறைமுகமாக எச்சரிக்கை விட்டிருக்கிறது. அதனால்தான், இந்தியா உள்ளிட்ட அதன் அடிவருடி நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் அனைத்தும் அமெரிக்காவின் மேலாதிக்க திமிரைக் கண்டிப்பதில் அடக்கியே வாசிக்கின்றன.

எனவே, உலகெங்கிலும் சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் விரும்பும் உழைக்கும் மக்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பு போராளி அமைப்புகள், கம்யூனிசப் புரட்சியாளர்கள் தலைமையில் அணிதிரண்டு, ஆயுதமேந்திப் போராடினால் மட்டுமே, அமெரிக்காவின் மேலாதிக்கப் போர்வெறியை முறியடிக்க முடியும்; இரண்டாம் உலகப் போர் தொடங்கி இன்றுவரை; கொரியா ஆக்கிரமிப்புப் போர் தொடங்கி ஈராக் ஆக்கிரமிப்புப் போர் வரை, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நடத்தியிருக்கும் போர்க் குற்றங்களை விசாரித்து, அக்குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைக் "கண்ணியமான" முறையில் தண்டிக்கவும் முடியும்!

• அழகு


படிப்பகம்

# அரசியல் அமைப்பு முழுவதும் புரையோடிப் போனது!

நடுத்தர வர்க்கத்தினர், எப்போதுமே மற்ற வர்க்கத்தினரை விட அறிவாளிகளாகத் தங்களை எண்ணி சுயதிருப்தியில் மிதக்கிறார்கள். ஆனால், உண்மையில் அவர்கள் அற்பவாதிகள். அவர்கள் அறிவோ மிகவும் மேலோட்டமானதுதான்; ஆழமானதல்ல. சமீபத்தில் வெளியான சில வழக்குமன்றத் தீர்ப்புகளைக் கண்டதும், தமது அரசியலற்ற பார்வையுடன் துள்ளிக் குதிக்கத் தொடங்கிவிட்டார்கள். ''பார்த்தீர்களா, எல்லாம் அரசியல்வாதிகளால்தான் நாடே கெட்டுப் போகிறது. இதை நீதிமன்றம் மீண்டும் நிரூபித்து விட்டது'' என்று கூச்சல் போடுகின்றனர்.

பிரியதர்சினி மட்டு, மற்றும் ஜெசிகாலால் கொலை வழக்குகளில் அரசியல் தலையீடு காரணமாக குற்றவாளிகள் முதலில் விடுவிக்கப்பட்டனர். பின்னர் செய்தி-ஊடகம் மற்றும் சமூக அமைப்புகளின் முயற்சிகள் காரணமாக நீதி நிலைநாட்டப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். இவ்வளவு காலமும் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொலைக்குற்ற வழக்கிலிருந்த தப்பிவந்த மத்திய நிலக்கரி அமைச்சரும், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவருமான சிபு சோரன், சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தால் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டு, ஆயுள் தண்டனை பெற்றுள்ளார். பாரதீய ஜனதா கட்சியின் எம்.பி.யும் பிரபல முன்னாள் கிரிக்கெட் வீரருமான நவஜோத்சிங் சித்து ஒருவரை அடித்துக் கொன்ற வழக்கில் மூன்றாண்டு கடுங்காவல் தண்டனை பெற்றுள்ளார்.

''மேற்கண்ட வழக்குகளில் தாமதமாகத் தீர்ப்புகள் வந்தாலும் நீதி நிலைநாட்டப்பட்டு விட்டது. நீதித்துறையின் மீது மக்கள் நம்பிக்கை, உறுதியாகி விட்டது'' என்கிறார்கள் நடுத்தர வர்க்க அறிவுஜீவிகள். ''இவை அரசியல்வாதிகள் மீது நீதித்துறை அடைந்த வெற்றி'' என்கின்றனர். இதற்குத் துணையாக இன்னொரு சான்றையும் எடுத்துக் காட்டுகிறார்கள். ''ஓட்டுவங்கியை நோக்கமாகக் கொண்டு இடஒதுக்கீடு அதிகரிப்பு, இசுலாமியர்களுக்கு இடஒதுக்கீடு போன்ற நடவடிக்கைகளை அரசியல்வாதிகள் மேற்கொள்வதை எதிர்த்து நீதிமன்றங்கள் தீர்ப்புகள் கூறுகின்றன. நாடாளுமன்ற முடிவுகளை நீதிமன்றப் பரிசீலனைக்குட்படுத்துவதைத் தடுக்கும் ஒன்பதாவது பிரிவின் கீழ் சட்டங்கள் இயற்றுவதை உச்சநீதி மன்றம் எதிர்த்துள்ளது. ஆகவே, அரசியல்வாதிகள் ரொம்பவும் ஆட்டம் போட முடியாதவாறு மூக்கணாங்கயிறு போடுகிறது, உச்சநீதி மன்றம்'' என்று நடுத்தர வர்க்க அறிவுஜீவிகள் குதூகலிக்கின்றனர்.

இவர்கள் படித்த அறிவுஜீவிகள் தாம்; ஆனால், இவர்களுக்கு அரசியல் என்றால் என்னவென்று தெரியவில்லை. படிக்காத பாமரர்களைப் போன்றே இந்த விசயத்தில் சிந்திக்கிறார்கள். உள்ளூராட்சி முதல் நாடாளுமன்றம் வரை நடக்கும் பல்வேறு வகைத் தேர்தல்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் மட்டும்தான் அரசியல்; அவற்றில் பங்கேற்கும் கட்சிகள், அமைப்புகள் தாம் அரசியல் கட்சிகள், அரசியல் அமைப்புகள்; அவற்றின் பிரமுகர்கள், தலைவர்கள்தாம் அரசியல்வாதிகள் என்று நினைக்கிறார்கள்.


அதிகார வர்க்கம், போலீசு, இராணுவம், சிறைச்சாலை, நீதிமன்றம் மற்றும் இவை சார்ந்த அனைத்துத் துணை நிறுவனங்களும் அரசு அமைப்புதான். இப்போது புதிதாக ''அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்'' என்ற பெயரில் அவதாரம் எடுத்துள்ள அமைப்புகளும் உண்மையில் அரசியல் அமைப்புகள்தாம். இந்த நிறுவனங்கள் - அமைப்புகள் சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களும், நடவடிக்கைகளும் அரசியல்தான். இவற்றில் பங்கேற்கும் எல்லா நபர்களும் அரசியல்வாதிகள்தாம். ஆனால், இவையெல்லாம் நிர்வாக அமைப்புகள், நேர்மையாகவும், தூய்மையாகவும் இயங்கக் கூடியனவென்றும், மக்களின் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவை - அதாவது மற்ற யாரும் இவற்றின் மீது குறைகூறக் கூடாது என்றும், தேர்தல் அரசியல்வாதிகள்தாம் கேடானவர்கள்; எல்லாவிதமான அரசியல் தவறுகளுக்கும் காரணமானவர்கள் என்றும் படித்த அறிவுஜீவிகள் கருதுகின்றனர். இந்த வாதத்துக்கு ஆதாரமாக சிபு சோரன், சித்து போன்றவர்கள் நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டதைக் காட்டுகிறார்கள்.

ஆனால், உண்மையோ வேறுவிதமாக உள்ளது. இராணுவ அமைப்புதான் நாட்டிலேயே மிகப்பெரிய மக்கள் விரோத ஊழல் அமைப்பு; நாட்டிலுள்ள சிறைச்சாலைகள் எல்லாம் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளின் பாதுகாப்பான சொர்க்க புரிகளாக உள்ளன, நாட்டிலேயே மிக உயர்ந்ததாகப் போற்றப்படும் போலீசு அமைப்பான சி.பி.ஐ.யும், உச்சநீதி மன்றமும் நடைநிந்த குற்றவாளிகளுக்குத் துணை செய்யும் அமைப்புகளாகவே உள்ளன. இதற்கான ஆதாரங்களை வேறு எங்கும் தேட வேண்டியதில்லை. சிபு சோரன், சித்து விவகாரங்களிலேயே புதைந்துள்ள உண்மை இதுதான்.

சிபு சோரனுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்படுவதற்குக் காரணமாக அமைந்த குற்றம் நடந்தது 1994-ஆம் ஆண்டு. நவஜோத் சிங் சித்துவுக்கு மூன்றாண்டு சிறை தண்டனை வழங்குவதற்குக் காரணமாக இருந்த குற்றம் நடந்தது 1988-ஆம் ஆண்டு. இதற்கிடையே சிபு 12 ஆண்டுகளாக நாடாளுமன்ற உறுப்பினராகவும், சில ஆண்டுகள் மத்திய அமைச்சராகவும் இருந்துள்ளார். சித்துவோ, இந்தியக் கிரிக்கெட் அணி வீரராகவும், வானொலியில் விமர்சகராகவும், பின்னர் எம்.பி. ஆக சில ஆண்டுகளும் இருந்து கோடி கோடியாக சம்பாதித்து சுதந்திரமாக வாழ்ந்துள்ளார். ''தாமதமாக வழங்கப்படும் நீதி, உண்மையில நீதி மறுக்கப்படுவதாகும்'' என்று படித்த அறிவுஜீவிகள் அடிக்கடி பிதற்றும் வசனம் இந்த வழக்குகளுக்குப் பொருந்தாதா? போலீசும் நீதித்துறையும் தானே இதற்குக் காரணம்! ''அரசியல்'' தலையீடுதான் தாமதத்திற்குக் காரணமென்றால் முதுகெலும்பில்லாத போலீசுக்கும், நீதித்துறைக்கும் படித்த அறிவுஜீவிகள் ஏன் வக்காலத்து வாங்கவேண்டும்?

www.padippakam.com

1994-ஆம் ஆண்டு, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா எம்.பி.யாக இருந்த சிபுசோரனும் மற்றும் நான்கு பேரும் சேர்ந்து அவரது தனிச்செயலாளராக இருந்த சசிநாத் ஜா என்பவரை புதுதில்லியிலிருந்து கடத்தி ராஞ்சி நகரின் ஒரு குடியிருப்புக்குக் கொண்டுபோய் கொன்றுவிட்டனர். கொல்லப்பட்டவரின் சகோதரர் கொடுத்த புகாரின் பேரிலும் அவரது தாயார் தொடுத்த வழக்கில் தில்லி உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின்படியும், வழக்கு சி.பி.ஐ. விசாரணைக்குப் போனது. நான்காண்டுகளுக்குப் பிறகு, அதாவது 1998-இல் குற்றப் பத்திரிக்கை தாக்கலாகியது; கொலை நடந்த 12 ஆண்டுகளுக்குப் பிறகு, அதாவது 2006 டிசம்பரில் கொலையாளிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது, சி.பி.ஐ.யின் சிறப்பு நீதிமன்றம்.



கொலைக் குற்றத்திற்காக சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட பிறகு, சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்படும் சிபு சோரன்.

இந்த விவகாரத்தில் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, கொலைக்கான காரணம், பின்னனி என்னவென்பதுதான். 1993-ஆம் ஆண்டு, நரசிம்ம ராவ் தலைமையிலான காங்கிரசின் சிறுபான்மை அரசுக்கு எதிராக வலதுசாரி பா.ஜ.க. மற்றும் சி.பி.எம். தலைமையிலான, இடதுசாரிகள் ஆகியோர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர். அரசு நிச்சயம் கவிழ்ந்துவிடும் என்ற நிலை இருந்தது. ஆனால், பல கோடி ரூபாய் இலஞ்சம் பெற்றுக் கொண்டு சிபு சோரன் தலைமையிலான ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவின் சிபு, மகத்தோ உட்பட ஐந்து எம்.பி.க்கள் நரசிம்மராவ் அரசுக்கு ஆதரவாக வாக்களித்து, நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. காங்கிரசுக்கும் ஜா.மு.மோ.வுக்கும் இடையிலான இரகசிய பேரம் பற்றிய உண்மைகளை அறிந்திருந்த சிபு சோரனின் தனிச் செயலர் சசிநாத் ஜா, இலஞ்சத் தொகையில் பங்கு கேட்டிருக்கிறார். அப்போது தான் இலஞ்சம் வாங்கியது எங்கே அம்பலமாகிவிடுமோ என்று அஞ்சிய சிபுசோரன் தனது தனிச் செயலாளரை தில்லியிலிருந்து கடத்திக் கொண்டு போய் ராஞ்சியில் வைத்துக் கொன்றுவிட்டார்.

இந்தக் கொலைக்கு மூலகாரணமாக இருந்த இலஞ்ச விவகாரம் பின்னர் அம்பலமாகியது. நரசிம்மராவின் ஆட்சிக் காலமும் முடிந்துவிட்ட பிறகு நரசிம்மராவ், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா எம்.பி.க்கள் மற்றும் முன்னாள் பிரதமர் சரண் சிங்கின் மகன் அஜித் சிங் மீது கிரிமினல் இலஞ்ச ஊழல் வழக்குப் போட்டது, பின்னர் வந்த ஐக்கிய முன்னணி அரசு. சி.பி.ஐ. நடத்திய இந்த வழக்கில், இலஞ்சம் வாங்கியதை மறுக்க முடியாத நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துரிமை மற்றும் வாக்குரிமை மீது கிரிமினல் வழக்குப் போடமுடியாது என்று வாதிட்டனர். சி.பி.ஐ. நீதிமன்றமும், தில்லி உயர்நீதி மன்றமும் இந்த வாதத்தை நிராகரித்தன.

ஆனால், நரசிம்மராவுக்கு எதிராக சி.பி.ஐ. நடத்திய வழக்கில் இலஞ்சம் வாங்கியவர் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் அங்கு பேசியதற்கும் ஓட்டளித்ததற்கும் வழக்குப் போடமுடியாது; அது அவரது சிறப்புரிமை என்றும் இலஞ்சம் கொடுத்தவர் மீது மட்டும் வழக்குப் போடலாம் என்றும் உச்சநீதி மன்றத்தின் அரசியல் சட்ட அமர்வு நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் சிபு சோரன் மற்றும் அவரது கட்சி எம்.பி.க்கள் மீதான வழக்கை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. ஆனால், தனது தீர்ப்பின்படியேகூட, இலஞ்சம் கொடுத்த நரசிம்மராவின் மீது எந்த நடவடிக்கையும், தண்டனையும் விதிக்கவில்லை. மேலும் பல இலஞ்ச ஊழல் தில்லுமுல்லு மோசடி வழக்குகளில் இருந்து நரசிம்ம ராவை விடுதலை செய்தது.

இந்த வழக்கில் உச்சநீதி மன்றம் மேலும் கோமாளித்தனமான தீர்ப்பு வழங்கியது. இலஞ்சம் பெற்றவர்கள் குற்றவாளிகள் அல்லவென்று விடுவிக்க வகை செய்த உச்சநீதி மன்றம், இலஞ்சம் வாங்கியதற்காக அஜித் சிங் மீது குற்ற விசாரணை நடத்தலாம் என்று அனுமதித்தது. இலஞ்சம் பெற்றுக் கொண்டு நாடாளுமன்றத்தில் வாக்களிப்பதில் இருந்து அவர் விலகி இருந்தார் என்று காரணம் கூறியது, உச்சநீதி மன்றம்; அவர் ஓட்டுப் போடவில்லை; ஆதலால் வாங்கிய இலஞ்சம் அவரது ஓட்டைப் பாதிக்கவில்லை என்று வினோதமான விளக்கம் வேறு கொடுக்கப்பட்டது. இத்தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும்படி அஜீத்சிங் கோரியதையும் உச்சநீதி மன்றம் நிராகரித்தது. இதே வாதத்தின் அடிப்படையில் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றமும் அஜித் சிங் மீதான குற்றவிசாரணையிலிருந்து அவரை விடுவிக்க மறுத்துவிட்டது.

ஆனால், உச்சநீதி மன்றத்தின் அடிமுட்டாள்தனத்தை, அறிவுநேர்மையற்ற செயலை அஜித் சிங் விவகாரம் மேலும் நிரூபித்து விட்டது. அதாவது நரசிம்மராவிடம் இலஞ்சம் வாங்கிய அஜித் சிங் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோது உச்சநீதி மன்றம் கூறியதைப்போல வாக்களிக்காமல் இருந்து விடவில்லை. அத்தீர்மானத்தை ஆதரித்து, இலஞ்சம் கொடுத்த நரசிம்மராவுக்கு எதிராக வாக்களித்திருக்கிறார். இந்த உண்மையைச் சொல்லி தனது தீர்ப்பை மறுபரிசீலனை செய்யக் கோரியபோதும் உச்சநீதி மன்றம் நிராகரித்து விட்டது. அதாவது இலஞ்சம் வாங்கிக் கொண்டு ஒப்பந்தப்படி வாக்களித்தவர்கள்மீது குற்ற விசாரணை நடத்த முடியாது; இலஞ்சம் வாங்கிக் கொண்டு ஒப்பந்தப்படி வாக்களிக்காமலோ எதிர்த்து வாக்களித்தாலோ அவர்மீது குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்பதுதான் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பின் சாரம். மொத்தத்தில், இலஞ்சம் கொடுத்தவருக்கு இலஞ்சம் வாங்கியவர் விசுவாசமாக இருக்கவேண்டும்; வேறுவிதமாக நடக்கக் கூடாது என்பது உச்சநீதி மன்றம் போட்டுள்ள புதிய சட்டம்!


படிப்பகம்

www.padippakam.com



உச்சநீதி மன்றத்தால் தனக்கு அளிக்கப்பட்ட தீர்ப்பும் தண்டனையும் நிறுத்தி வைக்கப்பட்டதை, பா.ஜ.க.தலைவர் அருண் ஜெட்லியுடன் சேர்ந்து கொண்டாடும் கிரிக்கெட் விளையாட்டு வீரர் நவஜோத் சிங் சித்து (வலது).

நாடாளுமன்ற விவாதங்களில் பயமின்றி அதன் உறுப்பினர்கள் பேசவும், வாக்களிக்கவும் அதற்காக அவர்கள் மீது சிவில் மற்றும் கிரிமினல் வழக்குத் தொடுக்க முடியாது என்று தடை விதிக்கிறது 105 (2)-வது சட்டப் பிரிவு. ஆனால், இதை 1998-ஆம் ஆண்டு உச்சநீதி மன்றம் வழங்கிய இத்தீர்ப்பு கையுங்களவுமாகப் பிடிபட்ட இலஞ்ச ஊழல் பேர்வழிகளைத் தப்புவிப்பதற்காகப் பயன்படுத்திக் கொண்டது, உச்ச நீதி மன்றம். அதே உச்சநீதி மன்றம் தான் 2006-ஆம் ஆண்டு இறுதியில் வழங்கிய ஒரு தீர்ப்பில் இதையே புரட்டிப் போட்டுப் பேசுகிறது. நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்பதற்கு இலஞ்சம் வாங்கியதற்காக, பதவி நீக்கம் செய்யப்பட்ட பதினொரு எம்.பி.க்கள் அதற்கு எதிராக வழக்குப் போட்டனர். அந்த வழக்கைத் தள்ளுபடி செய்த உச்சநீதி மன்றம் இலஞ்சம் வாங்கிக் கொண்டு கேள்வி கேட்ட எம்.பி.க்களைப் பதவி நீக்கம் செய்தது சரிதான் என்று தீர்ப்புக் கூறியது. அதன்பிறகு வேறொரு வழக்கில் நீதிமன்ற விசாரணைக்கு அப்பால் வைக்கும் சட்டப் பிரிவு ஒன்பதின் கீழ் வைக்குமாறு நிறைவேற்றப்படும் சட்டங்களையும் நீதிமன்றம் விசாரிக்க உரிமை உண்டு என்று தீர்ப்புக் கூறியுள்ளது.

அப்போது, இலஞ்ச ஊழல் பேர்வழிகளான நரசிம்ம ராவ் மற்றும் அவரது கூட்டாளிகளுக்குச் சாதகமாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்பு உரிமைகளை வளைத்துத் தீர்ப்புச் சொன்ன உச்சநீதி மன்றம், இப்போது அந்த சிறப்பு உரிமைகளை ஏற்க முடியாது, தலையீடு செய்வோம் என்கிறது. ஏனென்றால் இப்போது, நாடாளுமன்றம் கொண்டு வரும் இடஒதுக்கீடு போன்ற ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சில்லரை சீர்திருத்தங்களைக் கூட சகித்துக் கொள்ளாது நாடாளுமன்றத்துக்குள்ள சிறப்பு உரிமைகளையும் மறுப்போம் என்கிறது உச்சநீதி மன்றம்.

நடுத்தர வர்க்க அறிவுஜீவிகளில் மிகமிகப் பெரும்பான்மையினர் காங்கிரசு மற்றும் அதன் கூட்டணி கட்சிகளை (இடது சாரி கூட்டணியும் இதில் அங்கும்) ஆதரிப்பவர்கள் அல்லது ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மற்றும் அதன் கட்டணி கட்சிகளை ஆதரிப்பவர்கள். நரசிம்மராவ், இந்திரா, ராஜீவ் உட்பட காங்கிரசுத் தலைவர்கள் பலரின் இலஞ்ச - ஊழல் அதிகார முறைகேடுகளில் உச்சநீதி மன்றம் துணை போயிருக்கின்றது.

சிபு சோரன் அவரது கூட்டாளிகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் பெருங் கூச்சல் போடும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கட்சியோ சிபு சோரனுடன் சேர்ந்து இலஞ்சம் வாங்கிய மகத்தோ என்ற ஜா.மு.மோ.வின் இன்னொரு எம்.பி.யை இலஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கியது. அவர் பேரங்கள் படியாமல் ஒரு சில மாதங்களிலேயே பா.ஜ. கட்சியை விட்டு வெளியேறினார். குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டவர்கள் பதவி விலக வேண்டும் என்று சிபு சோரன் உட்பட எதிர்த்தரப்பினர் விவகாரங்களில் கூச்சல் போட்டு நாடாளுமன்றத்தைச் செயல்படவிடாமல் முடக்கி வைக்கும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ''யோக்கியவான்கள்'' நவஜோத் சிங் சித்து விவகாரத்தில் - பொது இடத்தில் கார் நிறுத்தும் தகராறில் ஒருவரை அடித்துக் கொன்ற வழக்கு 1988-இல் இருந்து நடந்த போதும் அவரை எம்.பி. ஆக்கினர். இப்போது கொலைவழக்கில் மூன்றாண்டு சிறைத் தண்டனை பெற்ற சித்து, பெயருக்குப் பதவி விலகி, உச்சநீதி மன்றத்தில் தண்டனையை நிறுத்தி வைக்கும் உத்தரவு பெற்றவுடன், மீண்டும் பா.ஜ.க.வால் எம்.பி. தேர்தலில் நிறுத்தப்படுகிறார்.

பா.ஜ.க. ஆளும் இராஜஸ்தான் மாநிலத்தில் ஒரு ஜெர்மானியப் பெண்ணைக் கற்பழித்துவிட்டான், அதன் கூட்டணி கட்சி ஆளும் ஒரிசா மாநில போலீசு பொது இயக்குநர் (டி.ஜி.பி.) மகன். அதற்காக ஏழாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட தன் மகனை சொந்த ஜாமீனில் - பரோலில் அழைத்து வந்த ஒரிசா டி.ஜி.பி அவனை தலைமறைவாக வைத்துக் கொண்டிருக்கிறார். சுமார், இரண்டு மாதங்களாகியும் டி.ஜி.பி.யையும் பதவி நீக்கம் செய்யாமல், குற்றவாளியையும் பிடிக்காமல் இரு மாநில அரசுகளும் ஆட்டங்காட்டி வருகின்றன. புத்தாண்டு கேளிக்கையில் கலந்து கொண்டு, பெண்களிடம் தகாத முறையில் நடந்த இரண்டு இராணுவ அதிகாரிகளைக் கடந்தமாதம் கைது செய்தது கொல்கத்தா போலீசு. உடனே இராணுவப் படையொன்று போலீசு நிலையத்துக்குள் நுழைந்து சூறையாடி, போலீசுக்காரன்களையும், அடித்து நொறுக்கி விட்டு குற்றவாளிகளான இராணுவ அதிகாரிகளை மீட்டுச் சென்றது இப்போது மத்திய மாநில அரசுகள் (சி.பி.எம். அரசுதான்) சமரசம் செய்து விவகாரத்தை மூடி மறைக்க எத்தணிக்கின்றன.

இதுவரை பார்த்த விவரங்கள் காட்டுவது என்னவென்றால், தேர்தல் கட்சிகளும், அதன் பிரமுகர்கள் - தலைவர்கள் மட்டுமல்ல உச்சநீதி மன்றம் உட்பட நீதிதுறையும் போலீசும், இராணுவமும் மொத்தத்தில் ஒட்டு மொத்த அரசு எந்திரமே செல்லரித்துப் போயிருக்கின்றன. இதில் ''அரசியல்வாதிகளை'' மட்டும் குறைகூறி, ஒட்டு மொத்த அரசு அமைப்பைப் பாதுகாக்க எத்தணிப்பது பச்சையான மோசடியும் பித்தலாட்டமும் ஆகும்.

● மாணிக்கவாசகம்


படிப்பகம்

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

இரத்த சோகை, அயோடின் பற்றாக் குறை, கண் பார்வை பாதிப்பு போன்ற நோய்களுக்கு இவ்வருடம் முழுவதும் மருந்து கொடுக்க முடியாமல் திண்டா டும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், சி.டி.ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் போன்ற அதி நவீன மருத்துவப் பரி சோதனைக் கருவிகளை நிறுவுவது, அக்கருவிகளைத் தயாரிக்கும் சீமென்ஸ் போன்ற பன்னாட்டு நிறுவ னங்களுக்குப் பயன்படுமேயொழிய, ஏழை நோயாளிகளுக்குப் பயன்ப டாது; மேலும், ஆரம்ப சுகாதார நிலை யங்களில் சிறப்புப் பயிற்சிப் பெற்ற மருத்துவர்களை நியமிக்காமல், பரி சோதனை வசதிகளை மட்டும் ஏற்படுத் துவது ஏமாற்று வேலை'' என சமூக சமத்துவத்திற்கான மருத்துவர்கள் சங் கம் இந்த டாம்பீகத்தை அம்பலப்படுத் தியிருக்கிறது.

''ஒவ்வொரு நாடும், தனது குடிமக் களுக்கு மருத்துவ-சுகாதார வசதி களைச் செய்து கொடுக்க, தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில், குறைந்தபட்சம் 5 சதவீதத் தொகையை ஒதுக்க வேண்டும்'' என உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைத்துள்ளது. ஆனால், இந்திய அரசோ, 1 சதவீதத் துக்கும் குறைவாகத்தான் (0.9%) மருத் துவ சேவைக்கு நிதி ஒதுக்குகிறது. இந்த அற்பத் தொகை ஒதுக்குவதைக் கூடக் கைகழுவி விட வேண்டும் என்ற நோக் கத்தோடுதான், ஆரம்ப சுகாதார மையங்களில் சிகிச்சைக் கட்டணம் அறிமுகப்படுத்தப்படுகிறது.

அரசு, கட்டாய-இலவச மருத்துவ சேவையை வழங்குவதற்குப் பதிலாக, ஐந்து நட்சத்திர மருத்துவமனைகள், மருத்துவக் காப்பீடு ஆகிய தனியார் மயத்திட்டங்களை ஊக்குவிக்க வேண் டும் என்பதுதான் தற்பொழுது இந்திய அரசின் மருத்துவக் கொள்கை. இதனை நடைமுறைப்படுத்தும் வித மாக, மருத்துவக் காப்பீடு திட்டத்திற் காக 54 கோடி ரூபாயை மானியமாக ஒதுக்கியிருக்கிறது, மைய அரசு. அரசு நன்றாக ஒத்துழைத்தால், மருத்துவக் காப்பீடு வியாபாரம், 2009-இல் 25,000 கோடி ரூபாயாக அதிகரிக்கும் எனத் தனியார் காப்பீட்டு நிறுவனங் கள் கணக்குப் போட்டுக் கொண்டு, பிணந்தின்னிக் கழுகுகளைப் போலக் காத்திருக்கின்றன.

மைய அரசு ஊழியர்களுக்காக நடத்தப்பட்டு வந்த மைய அரசு மருத் துவமனைகள் (CGHS) மூடப்பட்டு, அதற்குப் பதிலாக மைய அரசு ஊழியர் களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற் குத் தனியார் மருத்துவமனைகளுடன் வர்த்தக ஒப்பந்தங்கள் போடப்பட் டுள்ளன. இதேபோன்ற நிலைமை, மாநில அரசு நடத்திவரும் ''ஈ.எஸ்.ஐ.'' மருத்துவமனைகளுக்கும் வரக்கூடும்.

இதுவொருபுறமிருக்க, ஆரம்ப சுகாதார நிலையங்களில் நோயாளிகள் நலச் சங்கங்களை மாநில அரசுகள் ஏற் படுத்தவில்லையென்றால், அவற்றுக்கு ஒதுக்கப்படும் நிதி உதவியை நிறுத்தி விடுவோம் என மைய அரசு மிரட்டி வருகிறது. தமிழக முதல்வர் கருணாநி தியும், மைய அரசிடமிருந்து 30 கோடி ரூபாய் நிதி உதவியைப் பெறுவதற்கா கத்தான், நோயாளிகள் நலச்சங்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக நியாயப்படுத் தியிருக்கிறார்.

ஆட்சியைப் பிடித்தவுடனே சினிமா கழிசடைகளுக்குப் பல கோடி ரூபாய் வரிச் சலுகைகளை அறிவித் தார், கருணாநிதி. மைய அரசோ, முத லாளிகள் மைய அரசிற்குச் செலுத்த வேண்டிய 80,000 கோடி ரூபாய் வரி பாக்கியைத் தள்ளுபடி செய்ய நாள் பார்த்துக் கொண்டிருக்கிறது. இப்படி அவர்களிடம் தாராள மனதோடு நடந்து கொள்ளும் ஆட்சியாளர்கள், மக்களின் நல்வாழ்வுக்குச் செலவு செய்ய வேண்டும் என்றால், நிதிப் பற் றாக்குறை, கஜானா காலி என ஒப்பாரி வைத்து விடுவதோடு, மக்களைத் தனி யார்மயம் என்ற மரணக் குழிக்குள்ளும் தள்ளிவிட்டு விடுகிறார்கள்!

• செல்வம்

# மறுகாலனியாக்கத்திற்கு எதிராக மாடுகள் நடத்திய ஊர்வலம்

**தை** மாட்டுப் பொங்கல் திருநாளில் மாடுகளுக்குப் பொங்கல் வைத்து, மாலையில் மாடுகளை அலங்கரித்து ஊர் வலமாக அழைத்து வருவதும் குலவையிடுவதும் தமிழக விவசாயப் பெருமக்களின் பண்பாடாக உள்ளது. உசிலம் பட்டி வி.வி.மு. தோழர்கள், இம்மாட்டுப் பொங்கல் விழாவை மறுகாலனியாக்கத்திற்கெதிரான விழிப்புணர்வுப் பிரச்சாரமாக மாற்றி மாடுகளின் ஊர்வலத்தை நடத்தியுள்ள னர்.

மாட்டுப் பொங்கலன்று மாலையில், ''மறுகாலனியாக்கத் திற்கு எதிராக மாடுகள் நாங்க பொங்கப் போறோம்! மனு சங்க நீங்க...? என்ற கேள்வியுடன் கொம்புகளுக்கிடையே கட்டப்பட்ட அட்டையுடன் மாடுகளை ஊர்வலமாக அழைத்து வந்த வி.வி.மு. தோழர்கள், மாட்டின் முது கின் இருபுறமும், ''அமெ ரிக்கா, ஜப்பானில் மாட்டுக்கு மானியம் பல ஆயிரம் ரூபாய்; இங்கே ஒன்று மில்லை. தீனியில்லாம நாங்க சாகறோம். பால் பவு டர் இறக்குமதியால பாலுக்குக் கொள்முதல் விலை குறையுது. மாடுகளாகிய நாங்க நசிகிறோம். மறுகால னியாக்கத்தால விவசாயம் அழியுது. விவசாயிங்க தவிக்கி றாங்க. அதனால, ஐந்தறிவு உள்ள மாடுங்க நாங்க மறுகாலனி யாக்கத்துக்கு எதிராகப் போராடப் போறோம். ஆறறிவு உள்ள நீங்க...?'' என்ற முழக்கங்களை எழுதி கருக்கட்டான் பட்டியலிருந்து உசிலம்பட்டி வரை இந்தப் புதுமையான ஊர் வலத்தை நடத்தினர்.



வழியெங்கும் உழைக்கும் மக்கள் திரண்டு வரவேற்க, அவர்களது சந்தேகங்களுக்குத் தோழர்கள் அளித்த விளக்கம் தெருமுனைக் கூட்டங்கள் போல நடந்து புதுமையான பிரச் சாரமாக அமைந்தது. பொங்கல் விழா என்ற பெயரில் ஓட் டுக்கட்சிகளும் இதர அமைப் புகளும் கூத்தடித்துக் கொண் டிருந்த வேளையில், நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள மையமான பிரச்சினைகளை முன்வைத்துப் புதிய பாணி யில் நடந்த இந்தப் பிரச்சாரம் இப்பகுதிவாழ் மக்களிடம் பெருந்தாக்கத்தையும் புதிய நம்பிக்கையையும் ஏற்படுத்தி யுள்ளது.

– பு.ஜ. செய்தியாளர்கள்.

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No. 42648/85
Regn. No. TN/CC(S)Dn/190/06-08
WPP No. TN/PMG/CCR/WPP-582/06-08

www.padippakam.com

# தமிழ் மக்கள் இசை விழா

## மறுகாலனிய, பார்ப்பனியப் பண்பாட்டுப் படையெடுப்புக்கெதிரான போர் முழக்கம்



கருத்தரங்கம்:

- திப்பு சுல்தான்
- 1800-01 - தென்னிந்திய முதல் சுதந்திரப் போர்
- பகத்சிங்

விடுதலைப் போரின் வீர மரபு குறித்து அறிஞர்களின் உரை

கலை நிகழ்ச்சிகள்:

- கட்டபொம்மன்
- ஊமைத்துரை
- மருது சகோதரர்கள்
- தீரன் சின்னமலை
- திப்பு சுல்தான்

காலம் பல கடந்தும் உழைக்கும் மக்களின் கலை மரபில் வாழும் விடுதலைப் போரின் நாயகர்கள் பற்றிய கலை நிகழ்ச்சிகள்

14-வது ஆண்டாய்..

பல்லாயிரக்கணக்கான மக்களுடன்..

செயலுக்குத் தூண்டும் கருத்தரங்கம்..

போர் முரசு கொட்டும் கலை நிகழ்ச்சிகள்..

வரலாற்றில் புதைந்திருக்கும் நாட்டுப்பற்றை வரித்துக்கொள்ள வாருங்கள் தஞ்சைக்கு..



பிப்ரவரி-24, 2007
சனிக்கிழமை

தஞ்சை-திருவள்ளுவர் திடல்
காலை: கருத்தரங்கம்
மாலை: கலை நிகழ்ச்சிகள்

தொடர்புக்கு: காளியப்பன், எண்: 1, அண்ணா நகர், தஞ்சாவூர் - 613001. 94431 88285
puthiyakalacharam@rediffmail.com

## மக்கள் கலை இலக்கியக் கழகம்